



# த்ரைத்த ஆராதனை


**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்






**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்



**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 47 முதல் அச்சிடுதல்: ஆகஸ்ட் - 2025
பிரதிகள்: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

# ஆராதனை 

ஒரு மனிதன் தன்னுடைய எண்ணத்தில் மதிப்பிற்காக விசாரிப்பது அல்லது விசாரணை (ஆராதியடம்) செய்வது ஜெகத்தில் நடக்கின்ற விஷயம்தான். மதிப்புக் கொண்டது எதுவாக இருந்தாலும் அது பணத்திற்கு சமம் தான். மதிப்பு கொண்டது எது இருக்கிறதோ, அது எங்கு கிடைக்கின்றதோ, யாரிடம் கிடைக்கிறதோ தெரிந்து, அதற்காக சில காரியங்கள் செய்ய அல்லது சிறிது சிரமப்பட வேண்டியது இருக்கும். அப்படிப்பட்ட காரியத்திற்கு ஒரு தனித்துவமான பெயர் இருக்கிறது. அதனை தான் “ஆராதனை” என்று சொல்கின்றோம். மனிதர்களில் எத்தனையோரகமுள்ள ஆராதனைகள் இருக்கின்றது. எதனை தனமாக எண்ணிக் கொண்டு அதற்காக விசாரணை செய்யுவது ஆராதனை என்று சொல்கின்றோம் தானே! இப்போது ஒரு ஆராதனையை உதாரணமாக எடுத்துக்கொண்டு பார்க்கலாம். ஒருவன் மற்றொரு மனிதர்களுடைய நட்பு வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அப்போது அவன் பார்வையில் அந்த நட்பு மதிப்பானது. மற்றவரின் நட்பை வேண்டிய மனிதன் அந்த நட்பை சம்பாதித்துக் கொள்வதற்கு சிறிது முயற்சி செய்ய வேண்டியது இருக்கும். அந்த முயற்சி காரிய வடிவத்தில் இருக்கும். அப்படிப்பட்ட காரியத்தில் எதிர்பட்ட மனிதன் தெரிந்த போது கௌரவமாக பேசுவது, அந்த மனிதனுக்கு இஷ்டமான வேலை செய்வது, அந்த மனிதனின் நட்பு தேவைப்படும்படி நடந்து கொள்வது முதலியன காரியங்கள் இருக்கும். அப்படிப்பட்ட காரியங்கள் “நட்பு ஆராதனை” என்று சொல்கின்றோம். அதே விதமாக அன்பு ஆராதனையும் இருக்கிறது. அன்பு ஆராதனையில் அன்பு அவனுக்கு மதிப்பானது. அதனால் அன்பு + ஆராதனை = என்று சொல்கின்றோம். இந்த சூத்திரம் பிரகாரம் சம்பளம் வடிவத்தில் வரும் தனத்திற்காக வேலை செய்கின்றவனும் கூட ஆராதனை செய்தது போல ஆகும். அதனால் சிலருக்கு அவருடைய தொழில் அவருக்கு ஆராதனை என்று சொல்கின்றோம்.

பூமி மீது ஒரு மனிதன் ஒரு மதிப்பானதற்காக செய்யும் ஒவ்வொரு காரியம் ஒரு ஆராதனையாக இருந்தால் அப்படிப்பட்டது எத்தனையோ ஆராதனைகள் இருக்கின்றது. தேவதைகளில் இருந்து மனிதன் மதிப்பானதிற்காக அதனை வேண்டி அதற்காக செய்யும் காரியத்தை "தேவதை" ஆராதனை என்று சொல்கின்றோம். ஜெகத்தில் எத்தனையோ ரகமுள்ள தேவதை ஆராதனைகள் இருக்கிறது. ஒரு சுத்திர தேவதைகளை மகிழ்ச்சி படுத்துவதன் மூலம் அந்த தேவதையிலிருந்து அவர் நினைத்ததை அடைய முடியும் என்னும் அந்த தேவதைக்கு இஷ்டமான விலங்குகளை பலி கொடுப்பதை ஒரு காரியமாக, அந்த காரியத்தை "சுத்திர தேவதை ஆராதனை" என்று சொல்கின்றோம். இந்த விதமாக சுத்திர தேவதைகள் ஆராதனைகள் எத்தனையோ ரகங்கள் மற்றும் மகா தேவதைகள் ஆராதனைகள் எத்தனையோ ரகங்கள் தற்போது காலத்திலும் கூட இருக்கின்றது. அந்த விதமாகவே மனிதர்களானவர்கள், உயிரோடு இருக்கின்ற பாபாக்களை, இறந்து போன சுவாமிஜிகளை ஆராதனை செய்ய நடக்கின்றது. இன்னும் சொல்லிக் கொண்டால் சந்தானம் தனத்தை வேண்டி பாம்புகளை, ஆரோக்கிய தனத்தை வேண்டி மரத்தை ஆராதனை செய்வதும் நடக்கின்றது. தேகம் பலத்தை மதித்து குஸ்தி பயில்வான்கள் ஆஞ்சநேயனை, திருட்டுத்தனம் சுலபமாக நடக்க வேண்டும் என்னும் திருடர்கள் கிருஷ்ணரை, படிப்பு நன்றாக வர வேண்டும் என்று சரஸ்வதியை, சக்தி வேண்டும் என்னும் காளிகா தேவியை, யுக்தி வேண்டும் என்னும் விஷ்ணுவை, எத்தனையோ பேர் எத்தனையோ ரகமாக ஆராதனை செய்வார்கள். **இப்படிப்பட்ட ஆராதனைகள் எல்லாம் இணைத்து "பகவத்கீதாவில் இது எல்லாம் தேவதை ஆராதனை" என்று பகவான் கூறினார்.**

யோக சாஸ்த்திரமான பகவத்கீதாவை ஆதாரம் செய்து கொண்டு ஆராதனை விஷயங்கள் கவனித்தால் அதில் ஆராதனைகள் இரண்டு ரகமாக இருக்கிறது. ஒன்று ஜீவனுக்கு அசாஸ்வதமான தனத்தை கொடுக்கின்றது. இரண்டாவது ஜீவனுக்கு நிரந்தரமான தனத்தை

கொடுக்கின்றது. பிரக்ருதிக்கு வசமான சுகங்களை கொடுக்கும் ஆராதனைகளைப் பற்றி சொல்லிக் கொண்டு போனால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கானது இருக்கிறது. பரமாத்மா வசமான சுகங்களை கொடுக்கும் ஆராதனைகள் வெறும் மூன்று மட்டும் இருக்கின்றது. **அவற்றை பகவத்கீதாவில் ஒன்று பிரம்மயோகம், இரண்டாவது கர்மயோகம், மூன்றாவது பக்தியோகம்** என்று சொல்கின்றோம். இந்த மூன்று யோகங்களை அனுசரிக்காதவர்களும் கூட மூன்று யோகங்களுக்கு அடையாளமாக மூன்று ரகமான ஆராதனைகள், மூன்று நாட்களில் மூன்று காலங்களில் அனுசரிக்கும் படி பெரியோர்கள் தெரிவித்து உள்ளார்கள். அந்த மூன்று ஆராதனைகளையே "**த்ரைத்தாராதனை**" என்று சொல்கின்றோம். உலகத்தில் இருக்கின்ற ஆராதனைகள் எல்லாம் யோகத்திற்கு சம்பந்தம் இல்லாததாக, இன்பத் தனத்தை விரும்பியதாக இருக்கிறது. **வெறும் த்ரைத்தாராதனை மட்டும் ஞானதனத்தை கொடுத்து கடவுளில் ஐக்கியம் செய்கின்றது. த்ரைத்தாராதனை அல்லாமல் மற்ற ஆராதனைகள் எல்லாம் கர்மங்களை இணைக்கும் படி செய்து ஜென்மத்திற்கு அனுப்பும்படியாக இருக்கின்றது.**

நன்றாக ஆலோசனை செய்து பார்த்தால் இன்று மக்கள் மத்தியில் பெரியதாக பெயர் கொண்ட சுவாமிஜிகளுக்கே ஆராதனையின் அர்த்தம், விதானம் தெரியாமல் போனது. இனி சாதாரண மனிதனைப் பார்த்தால் அவர் என்ன செய்கின்றாரோ அவருக்கே தெரியாத நிலையில் இருந்து நான் செய்கின்றது எல்லாம் சரிதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். இங்கு சாதாரண மனிதனும், அங்கு சுவாமிஜிகளும் எனக்கு எல்லாம் தெரியும் என்ற சுவரைக் கட்டிக் கொண்டிருப்பதால் அவர் எதையும் கிரகிக்கும் நிலையில் இல்லை. மனிதர்களில் அரிதாக சிலர்கள் மட்டும் தனக்குத் தெரியாததை தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாலும், அவர்களும் கூட தேவதை ஆராதனை செய்கின்றவர்களையே அனுசரித்து அதே வழியில் போகுவதும் நடக்கின்றது. **ஆராதனைகளில்**

**பெரியதாக நினைத்துக் கொண்ட எக்ன யாகங்கள், ஜெபம் தபசுகள் என்னை ஆராதனை செய்யுவது அல்ல என்னும் பகவத்கீதாவில் கடவுளே சுயமாக சொல்லியபோது அந்த விஷயம் அவர்களுக்கு தெரியாமல் போனது.** பீடாதிபதிகள், மடாதிபதிகள் அவர்கள் கூட வெளியே எக்னங்கள் செய்து உள் எக்னங்களை பற்றி மறந்துவிட்டார்கள். **பகவத்கீதாவில் சொல்லிய திரவிய எக்னம், ஞான எக்னத்தை** அர்த்தம் செய்து கொள்ளாமல் போனார்கள். இப்படிப்பட்ட நிலையில் சாமான்யமான மனிதனை சரியான வழியில் நடக்க வைத்து, கடவுள் சன்னிதானத்திற்கு சேர்க்கின்றவர் குறைந்து போனார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் துவாபரயுகத்தில் கடவுள் பகவானாக பூமி மீது வந்து, எல்லா தேவதை ஆராதனைகளை விட்டு என்னை மட்டும் ஆராதனை செய்யுங்கள் என்று பகவத்கீதாவில் கூறினார். இறுதிக்கு எக்னங்கள்,

தானங்கள், வேதங்கள் படிப்பது, தபசுகள் கூட தன்னுடைய ஆராதனை அல்லவென்று, அவற்றினால் என்னிடம் சேர முடியாது என்று சொல்லிப் போனார். அந்த விஷயம் மக்களுக்கு தெரிந்தால் எங்களுக்கு இருக்கின்ற கௌரவம் போகும் என்னும் நினைத்த சில சுவாமிஜிகள் கடவுள் சொல்லியதை மக்களுக்கு தெரியாமல் செய்தார்கள். அதனால் கடவுளின் ஞான விஷயங்களில் மக்கள் எவ்வளவோ நஷ்டமாகி விட்டார்கள் என்று சொல்லலாம்.

இது எல்லாம் உணர்ந்த கடவுள் அவர் பூமி மீது சொல்லிய தர்மங்கள் யாருக்கும் தெரியாமல் போனது எனறு தெரிந்து, அதர்மங்கள் குறைந்து போகாமல் சஜீவமாக இருக்கிறது என்னும் கிரகித்து, அதர்மங்களை இல்லாமல் செய்து தர்மங்களை அபிவிருத்தி செய்வதற்கு பூர்வம் இருந்த ஞான விஷயங்களை நமக்கு ஞாபகம் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். அதனால் இந்த விஷயத்தை கற்பனையால் எனக்கு கொடுத்து, எழுத வைத்து உங்களுக்கு தெரிவிக்கின்றார். அதனால் “த்ரைத்தாராதனை” என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருந்த மூன்று ஆராதனைகள் தேவதை ஆராதனை அல்லவென்று, கடவுள் கீதாவில்

தெரிவித்த மூன்று யோகங்கள் சாராம்சமே த்ரைத்தாராதனை என்று தெரிந்து கொள்ள வேண்டும். த்ரைத்தாராதனை அனுசரித்தவர்கள் மூன்று யோகத்தை அனுசரித்தது போல் ஆகும். அதனால் தெய்வ சன்னதியான மோக்ஷத்தை அடைவதற்கு மூன்று ஆராதனைகள் மூன்று படிகள் போன்றது என்று சொல்லலாம். இந்த த்ரைத்தாராதனை படித்து அனுசரிக்காமல் போனாலும் பரவாயில்லை, இதனைப் பற்றி எதிர்ப்பாக பேசினால் அது தவறாமல் தெய்வ தூஷணை ஆகும். யாருக்குத் தெரியாமல் போன த்ரைத்தாராதனை பற்றி யாருக்காவது சொல்லினாலும், இந்த கிரந்தத்தை யாருக்காவது தானமாக கொடுத்தாலும் அது கடவுளுடைய காரியம் செய்தது போல் ஆகும். அது உண்மையான கடவுள் சேவையாகும்.

**இப்படிக்கு**

மூன்று மதத்திற்கு ஒரே குரு

த்ரைத்த சித்தாந்த ஆதி கர்த்தா

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்தயோகீஸ்வரர்**

## *த்ரைத்த ஆராதனை*

"ககனம் சூன்யம்" என்று சொல்வது எல்லோரும் கேட்டிருப்பீர்கள். அது வெறும் ஒரு சொல் மட்டுமல்லாமல் அப்பட்டமான சத்தியம். விவரமாக சொல்லிக் கொண்டால் ககனம் என்றால் ஆகாசம் என்று அர்த்தம். ஆகாசம் என்றால் சூன்யம் என்றே அர்த்தம். சூன்யத்தை கடவுளுக்கு சமமாக, எதுவும் அல்லாதது என்று உவமையாக சொல்லலாம். சூன்யம் அல்லது ஆகாசம் கடவுள் அல்லாத போதும் கடவுளுக்கு நெருக்கமாக, கடவுளுக்கு சமமாக ஒப்பிட்டு சொல்லலாம். எந்த ஸ்தூல பொருள் அல்லாத கடவுளை,

எந்த ஸ்தூல பொருட்கள் சூன்யத்தில் ஒப்பிட்டு சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்றும் பல பேர் தெய்வ ஞானம் ஞாபகம் செய்து கொண்டிருக்கும்போது ஆகாசம் பக்கம் பார்த்து நமஸ்கரித்துக் கொண்டிருப்பார்கள். கிரிக்கெட் விளையாடுகின்றவர்கள் 100 ரன் எடுத்த போது கடவுளுக்கு நன்றி கடனை சொல்லிக் கொள்வது போல் ஆகாசம் பக்கம் பார்ப்பது கவனிக்கலாம். அந்த விதமாகவே சிலர்கள் வார்த்தைகளில் கடவுள் மேலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று கூட சொல்வார்கள். இதன் போன்று பல பேர் அவர்களுடைய எண்ணத்தில் கடவுள் ஆகாசத்தில் நிறைந்து இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். கடவுள் தெரியப்படாமல் அணுஅணுவில் ஆகாசம் எல்லாம் நிறைந்து இருப்பது உண்மைதான். அதனால் "ககனம் சூன்யம்" என்பது போல் "சூன்யம் தெய்வம்" என்று கூட சொல்லலாம். அதுமட்டுமல்லாமல் கடவுள் மேலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று பல பேர் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் கவனித்தால் கடவுள் மேல் இருக்கின்ற ஆகாசத்தில் கூட இருக்கிறார் என்றே சொல்லலாம். கடவுள் காற்றிலும், அக்னியிலும், நீரிலும், பூமியில் அணுஅணுவில் நிறைந்திருந்தாலும், அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஒரு ஆகாசத்திற்கே எதற்கு முக்கியத்துவம் கொடுத்தார் என்னும் யோசனை செய்தால் சிறிது விவரம் தெரியும். அந்த விவரம் என்னவென்றால்!

காற்று அக்னி நீர் பூமி ஆகியவற்றில் சுயம் பிரகாசமானது எதுவும் இல்லை. எங்கேயாவது பூமியில் ரத்தினங்கள் போன்று சிறிது பிரகாசிக்கின்றது இருந்தாலும் அது சஜீவமாக இருக்காது. ஒரே ஒரு ஆகாசத்தில் மட்டுமே சஜீவமாக இருந்து, பிரகாசமாக இருந்து, எதனையாவதும் கிரகிக்கும் சக்தி கொண்ட கிரகமாக இருப்பது மூன்று மட்டும் இருக்கின்றது. அது ஒன்று சூரியன், இரண்டு சந்திரன், மூன்று நட்சத்திரம். ஆகாசத்தில் இருக்கின்ற சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் இந்த மூன்றும் பூர்வ காலத்திலிருந்து மனிதர்களால் தெய்வத்திற்கு சமமாக கருதப்படுபவர். பூமி

மீது நிவாசிக்கும் மக்கள் நாகரிகம் இல்லாத காலத்தில் இருந்து சூரியனை சிலர்கள், சந்திரனை சிலர்கள், நட்சத்திரங்களை சிலர்கள் ஆராதித்துக் கொண்டே இருக்கிறார்கள். மனிதர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த விக்கிரக ஆராதனைகள் இல்லாத காலங்களிலும் கூட கிரகங்களான சூரிய, சந்திர, நட்சத்திரங்களை ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். சில நாடுகளில் சூரியனை அதிகமாக ஆராதனை செய்து கொண்டு இருந்தார்கள், மற்ற சில நாடுகளில் சந்திரனை அதிகமாக ஆராதனை செய்து கொண்டு இருந்தார்கள். சில நாடுகளில் தனித்துவமாக நட்சத்திரங்களை அதிகமாக ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் சில நாடுகளில் சந்திரனை நட்சத்திரங்களை ஆராதனை செய்து கொண்டிருந்தபோது, இன்னும் சில நாடுகளில் சூரிய சந்திரனை, மற்ற நாடுகளில் மூன்று கிரகங்களை ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள். இப்போதும் அந்தந்த நாடுகளில் அவர்கள் நாட்டுக்கு சேர்ந்த கொடிகளின் மீது அவர்கள் ஆராதனை செய்கின்ற கிரகங்கள் பொம்மைகளை அடையாளமாக வைத்துக் கொண்டு கௌரவமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள். இன்றும் அமெரிக்கா கொடிகள் மீது நட்சத்திரங்களை, பாகிஸ்தான் கொடிகள் மீது சந்திரனை நட்சத்திரங்களை எல்லோரும் கவனித்து இருப்பீர்கள். இதனை கணக்கிட்டு பார்த்தால் 73 நாடுகள் அவர்களுடைய கொடிகள் மீது சூரியனையோ, சந்திரனையோ, நட்சத்திரங்களையோ அச்சிடப்பட்டது. அர்ஜென்டினா முதலியன 13 நாடுகள் சூரியன் கொடியை வைத்துக் கொண்டிருக்கும்போது, மாலதீவில் சந்திரன் கொடியை வைத்துக் கொண்டிருக்கும்போது, கியூபா, சைனா, அமெரிக்கா முதலியன 59 நாடுகள் நட்சத்திரங்களை தன் கொடிகள் மீது வைத்துக் கொண்டிருக்கின்றது.



Argentina

சூரியன் - அர்ஜென்டினா



Maldives

சந்திரன் - மாலதீவு



Burkina

நட்சத்திரம் - பர்க்கினா

பூர்வத்திலிருந்து தெய்வ ஞானத்தில் பின்தங்கி இருந்த 73 நாடுகள் ஆகாசத்தில் மூன்று கிரகங்களை உயர் நிலையில் தெய்வத்திற்கு சமமாக எண்ணிக் கொண்டு நாட்டு கொடியின் மீது கௌரவமாக வைத்துக் கொண்ட போது, பூர்வத்தில் இருந்து ஆத்ம ஞானத்தில் மிக உயர் நிலையில் இருந்து, ஞானத்திற்கு அடையாளமாக இந்துக்கள் என்னும், ஞானம் நிலையமான பாரத தேசம் இந்து நாடாக பெயர் கொண்டு இருக்கும்போது, இன்று ஞானத்தை இழந்த நாம் நமது நாட்டின் கொடியின் மீது சூரிய, சந்திர, நட்சத்திரங்களில் எந்த ஒன்றையும் கூட வைத்துக் கொள்ளாமல் மூன்று வண்ணங்களை, ஒரு வண்டியின் சக்கரத்தை வைத்துக்கொண்டோம். கொடியின் விஷயம் பக்கத்தில் வைத்தால் இன்று கூட பாரத நாட்டில் சூரிய சந்திரனை சிலர் ஆராதித்துக் கொண்டே இருக்கிறார் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். சூரிய நமஸ்காரம் என்ற பெயரில் சூரியனை, பௌர்ணமி பூஜை பெயரில் சந்திரனை, அமாவாசை பூஜைகளில் நட்சத்திரங்களை ஆராதனை செய்ய நடக்கின்றது. இந்த விதமாகவே உலகின் நான்கு மூலைகளிலும் நாகரிகமாக இருக்கின்றவர்களும், நாகரிகம் இல்லாதவர்களும், தெரிந்தோ தெரியாமலோ சூரிய சந்திர நட்சத்திரங்களை ஆராதித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்து தேசமான பாரத நாட்டில் இன்று கூட சில இடங்களில் சூரிய தேவாலயங்கள் இருக்கின்றது. சூரிய நமஸ்காரம் என்று காலையில் யாரோ ஒருவர் சூரியனை கும்பிடுவதும் கூட நடக்கின்றது.

இந்த விதமாக பார்த்துக் கொண்டு போனால் பூமி மீது பூர்வமிருந்து ஆகாசத்தில் இருக்கின்ற மூன்று கிரகங்களுக்கு தெய்வ சம்பந்தமாக எவ்வளவோ மதிப்பு இருக்கின்றது. எவ்வளவோ பெரிய மதிப்பு கொண்ட சூரிய சந்திர நட்சத்திரம் கிரகங்களை பரிசோதனை செய்து பார்த்தால் சூரியன் அதிகமாக தேஜஸ் கொண்டு அதிக கதிர்களை கொடுத்து முதல் இடத்தில் இருக்கிறார். அப்படியே இரண்டாவது ஸ்தானத்தில் சந்திரன் சூரியனை விட குறைவான தேஜஸ் கொண்டு குறைந்த கதிர்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். மூன்றாவது ஸ்தானத்தில் நட்சத்திரம் சந்திரனை விட குறைவான கதிர்களை கொடுப்பது குறைவான பிரகாசம் கொண்டு இருப்பது கிரகிக்கலாம். கதிர்களை கொடுப்பதிலும், பிரகாசமாக தெரிவதிலும் சூரியன் முதலாவது ஸ்தானத்தில் இருக்கும்போது, சந்திரன் இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கிறார். அதன் போலவே நட்சத்திரம் மூன்றாவது ஸ்தானத்தில் இருக்கிறது. இவர்களில் யார் தூரமாக இருக்கிறார் என்னும் பார்த்தால் கதிர்களில் இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கின்ற சந்திரன் நமக்கு 3,84,401 கிலோமீட்டரில் இருக்கும்போது, சூரியன் கிட்டதட்ட 14,96,00,000 தூரத்தில் இருக்கும்போது, நட்சத்திரங்கள் சில லட்சக்கணக்கான கோடி கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. இதன் பிரகாரம் கவனித்தால் சந்திரன் சூரியனை விட அருகில் இருக்கிறார் என்னும், சந்திரன் அருகில் இருப்பவர் சூரியன் தூரமாக இருப்பவர், நட்சத்திரம் இன்னும் மிக தூரமாக இருப்பவர் என்று தெரிகின்றது. மூன்று கிரகங்களை தனித்தனியாக கதிர்களிலும் தூரத்திலும் கவனித்தோம். அதன் போன்று இன்னொரு விதமான காலத்தில் பார்த்தால் சூரியன் பகலில், சந்திரன் ராத்திரியில், நட்சத்திரம் எப்போதும் தெரியும். அதனால் பகலுக்கு ராஜா சூரியன் என்னும், ராத்திரிக்கு ராஜா சந்திரன் என்னும், எப்போதும் ராஜா நட்சத்திரம் என்னும் பூர்வத்திலிருந்து நம் பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் பல பேர் எழுதிய எழுத்துக்களில் ரே ராஜா சந்திரன்

என்னும், தினகரன் சூரியன் என்று தெரிந்து கொண்டே இருக்கும்.

ஆகாசத்தில் மூன்று கிரகங்கள் கதிர்களிலும், தூரத்திலும், அதிகாரத்திலும் மூன்று ரகமாகவே இருக்கிறார்கள். **ககனம் சூன்யம், சூன்யம் தெய்வம், "தெய்வம் த்ரைத்தம்"** என்று நாம் இப்போது சொல்கின்றோம். இறுதிக்கு இதனுடைய சாராம்சம் என்னவென்றால் தெய்வம் மூன்று விதமாக இருக்கிறார் என்று அர்த்தம். ஆன்மீகத்தில் முக்கிய சூத்திரம் கூட இதுதான். தெரியாத தெய்வம் (கடவுள்) தெரியாத மூன்று பாகமாக இருக்கிறார். அந்த மூன்று பாகங்களை **பகவத்கீதாவில் ஷரன், அக்ஷரன், புருஷோத்தமன்** என்று சொல்லினார். அது அர்த்தமாகும் படி சொல்லிக் கொண்டால் நாசனம் ஆகின்றவர், நாசனம் ஆகாதவர் மற்றும் முதலில் இருவர் புருஷர்களை விட அதிமானவர் உத்தமமானவர் என்று அர்த்தம். இந்த மூவரையும் இன்னும் நன்றாக அர்த்தமாகும் படி சொல்லிக் கொண்டால் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மா என்று சொல்லலாம். இந்த த்ரைத்தமான தெய்வம் கண்ணுக்கு தெரிகின்றவர் அல்ல. அதனால் தெய்வத்தை தெரிவிப்பதற்காக கண்ணுக்கு தெரியும் சூரிய, சந்திர, நட்சத்திரங்களை மூன்றையும் சூன்யத்தில் கடவுளே பிரதிஸ்டித்தார். அதனால் சூரிய, சந்திர, நட்சத்திரங்களை நேரடியான தெய்வம் என்று நம் பெரியோர்கள் பல சந்தர்ப்பத்திலும் சொல்லினார்கள்.

தெரியாத தெய்வத்தை தெரிந்து கொள்ள தெரிகின்ற சூரிய, சந்திர, நட்சத்திரங்களை வைத்தார் என்று சொல்வதற்கு வலுவான ஆதாரம் கூட இருக்கிறது. அது என்னவென்றால்! தெய்வம் பகவத்கீதாவில் விஸ்வரூப சந்தர்சன யோகம் என்னும் அத்தியாயத்தில் **"நானே காலம்"** என்று கூறினார். அந்த காலத்தை கணக்கிடுவதற்கு சூரிய, சந்திர, நட்சத்திரங்களை தவிர எந்த ஆதாரமும் இல்லை. அதனால் எங்கு பார்த்தாலும் தெய்வத்திற்கும், மூன்று கோளத்திற்கும் எவ்வளவோ சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லலாம். இதுவரை நாம் சொல்லிக் கொண்டது

அபௌதிகமான கடவுளை தெரிந்து கொள்ள பௌதிகமான சூரிய, சந்திர, நட்சத்திரங்களே ஆதாரம் என்னும், பௌதிக முறையாக தெரிகின்ற சூரிய, சந்திர, நட்சத்திர கோளங்களை பற்றி சொல்லிக் கொண்டோம். இனி ஆன்மீக பிரகாரமாக விவரித்துக் கொண்டு பார்க்கலாம். இதுவரை நாம் சொல்லிக் கொண்ட விஷயம் எல்லாம் விஸ்வத்தில் உள்ள எல்லோருக்கும் சம்பந்தப்பட்டது என்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். விஷ்வவியாப்தமாக எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட விஷயமானதினால் இது எந்த ஒரு மதத்திற்கு சம்பந்தப்பட்டது அல்லவென்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். கடவுள் எல்லோரையும் சிருஷ்டித்தார், கடவுள் எல்லோருடையவர். கடவுளை தெரிந்து கொள்வதற்கு எல்லோருக்கும் சரிசமமாக உரிமை உள்ளது. அதனால் இந்த விஷயம் மதத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்று கிரகிக்க வேண்டும்.

பூமி மீது மனிதர்களை கடவுள் ஒரே முறையில் தேகத்தை தயார் செய்து எந்த மதமும் இல்லாமல் ஒரே தர்மம் பிரகாரம் பிறக்க வைத்தால், மனிதன் அதர்மங்களை அனுசரித்து, பலவிதமான மதங்களை சிருஷ்டித்து கொண்டு, மனிதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி என்பதை மறந்து போய், மத வெறியில் விழுந்து அவர்களுடைய ஜாதியை அவர்களே வெறுப்பு கொண்டு ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மத வெறுப்புகள், மத இம்சைகள் இல்லாமல் போக வேண்டும் என்றால் தெய்வக் ஞானம் தெரிந்து இருக்க வேண்டும். தெய்வ ஞானம் பிரகாரம் மனிதர்களும், விலங்குகளும், பறவைகளும் எல்லா ஜீவராசிகள் மதம் இல்லாமல் சமமாக இருக்கின்றது. அதன் பிரகாரம் மனிதர்கள் எல்லோரிலும் தெய்வ தர்மம் சமமானது. ஒரு மனிதனை எடுத்துக் கொண்டால் அவருடைய தேகத்தில் மூன்று ஆத்மாக்கள் நிவாசிக்கின்றது. தேகம் வேறு ஆத்மாக்கள் வேறு. தேகம் தெரிகின்றது, ஆத்மாக்கள் தெரியப்படாது. வெளியே மனிதன் எந்த மதம் பெயர் சொல்லிக் கொண்டாலும், எங்களுடைய கடவுள் பலானவர்

என்னும் எந்த கடவுளுடைய பெயர் சொல்லிக் கொண்டாலும், தேகத்தில் உள்ளே இருக்கின்ற ஆத்மாக்கள் மட்டும் எல்லோரில் ஒரே தர்மம் பிரகாரம் நிர்மிக்கப்பட்டது. எங்களுடைய மதத்தில் ஆத்மாவை பற்றி சொல்லப்படவில்லை என்றால், எங்களுடைய மதத்தில் இருக்கிறது இரண்டு ஆத்மா என்றாலும், அல்லது ஒரே ஆத்மா என்றாலும், நமக்கு இஷ்டம் வந்த மதப்பிரகாரம் சொல்லினாலும், கடவுளுடைய தர்மம் பிரகாரம் ஒவ்வொரு மனிதனும் மூன்று ஆத்மாவினால் நிறைந்திருக்கிறான். அந்த மூன்று ஆத்மாக்கள் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மா என்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஆன்மீக துறையில் இந்த மூன்று ஆத்மாக்களே ஆதாரம். **யாருக்காவது மூன்று ஆத்மாவை பற்றி தெரியாத வரை ஆன்மீகம் தெரியாதது போல ஆகும்.** இந்த மூன்றை த்ரைத்தம் என்று சொல்கின்றோம். த்ரைத்தம் சாஸ்திர முறையாக, சித்தாந்த முறையாக சொல்லப்பட்டதினால் மூன்று ஆத்மாக்கள் சாஸ்திரத்தை **"த்ரைத்த சித்தாந்தம்"** என்று சொல்கின்றோம். த்ரைத்த சித்தாந்தம் பற்றி தெரிந்து கொள்வது தேகம் அணிந்த ஒவ்வொரு மனிதனும், தலை இருக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையாகும்.

கடவுள் விஸ்வத்தில் ஜீவராசிகளில் மூன்று ஆத்மாக்களாக பிரிந்து இருக்கிறார். விஸ்வத்தில் மூன்று ஆத்மாவாக பிரிந்து இருக்கின்ற தெய்வம் ஆகாசத்தில் மூன்று கோளமாக தெரிகின்றார். **தெய்வம் தன் இருப்பதை தெரிவிப்பதற்கு ஆகாசத்தில் சூரிய, சந்திர, நட்சத்திரமாக தெரியப்பட வேண்டியது இருக்கின்றது. இதில் சூரியனை ஜீவாத்மாவாக, சந்திரனை ஆத்மாவாக, நட்சத்திரங்களை பரமாத்மாவாக ஒப்பிட்டு சொல்லலாம்.** மதத்திற்கு சம்பந்தமில்லாமல் ஒவ்வொரு தேகங்களில் மூன்று ஆத்மாக்கள் இருக்கிறது. உலகத்தில் **மூன்று ஆத்மாக்கள் இல்லாத மனிதர்களும், விலங்குகளும், பறவைகளும், சிறிய கிருமிகளும், பூச்சிகளும் எதுவும் இல்லை. மூன்று ஆத்மாக்கள் விஷயம் மர்மமான ரகசியம்.** அந்த ரகசியத்தை தெரிந்து கொள்வதற்கு ஆதாரமாக இருக்கின்ற சூரிய, சந்திர,

நட்சத்திரங்களுக்கு தனித்துவத்தை ஏற்படுத்துவதற்கு, வாரங்களில் ஏழு நாட்களில் முதலில் மூன்று நாட்களுக்கு இந்த கோளங்கள் பெயரை வைத்தார்கள். வாரங்களில் ஆரம்பமான முதல் நாளுக்கு சூரியன் பெயர் இருக்கும்படி ஞாயிற்றுக்கிழமை என்னும், இரண்டாவது நாளுக்கு சந்திரனுடைய பெயர் இருக்கும்படி திங்கட்கிழமை என்னும், அதன் போலவே மூன்றாவது நாளுக்கு நட்சத்திர பெயர் இருக்கும்படி செவ்வாய்க்கிழமை என்று பெயர் வைக்கப்பட்டது. சூரியனை ஆதித்யன் என்று சொல்கின்றார்கள் அதனால் ஞாயிற்றுக்கிழமை (ஆதிவாரம்) என்னும், சந்திரனை சோமன் (சோமவாரம்) என்று சொல்கின்றார்கள். அதனால் திங்கட்கிழமை என்றும், நட்சத்திரங்களை செவ்வாய் (மங்களவாரம்) என்று சொல்கின்றார்கள் அதனால் செவ்வாய்க்கிழமை என்று சொல்லினார்கள்.

ஒவ்வொரு தேகத்தில் ஜீவாத்மா அஞ்ஞானசம் பந்தமானது, ஆத்மா மட்டும் ஞான சம்பந்தமானது, பரமாத்மா மோக்ஷ சம்பந்தமானது. அதனால் சூரியன் நாளான ஞாயிற்றுக்கிழமையை அஞ்ஞான ஜீவாத்மா பிறந்த நாள் என்னும், சந்திரன் நாளான திங்கட்கிழமை ஆத்ம ஞானம் பிறந்த நாள் என்னும், நட்சத்திர நாளான செவ்வாய்க்கிழமை மோக்ஷம் தெரிந்த நாள் என்று சொல்லலாம். இனி விவரமாக சொல்லிக் கொண்டால் கடவுள் ஜீவிகளுக்காகவே இந்த விஸ்வத்தை சிருஷ்டித்தார். அதனால் அந்த நாளை ஞாயிற்றுக்கிழமை என்று சொல்கின்றோம். “ஆதி” என்றால் முதலாவது என்று கூட அர்த்தம் இருக்கிறது. ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மாக்களில் முதலாவதான ஜீவனை சிருஷ்டித்த நாள் ஆனதினால் அந்த விதமாக கூட முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை என்று சொல்கின்றோம். இது எல்லாம் மனிதர்களுக்கு எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட விஷயம் என்னும் முதலிலேயே சொல்லிக் கொண்டோம் அல்லவா! அதன் பிரகாரமே இன்று கூட மனிதர்கள் நிவாசித்துக் கொண்டிருக்கின்ற எங்கயாவதும்

உலகமெல்லாம் ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை மூன்று நாளும் இருக்கின்றது. இந்த மூன்று நாட்களுடைய பெயர்கள் விஸ்வமெல்லாம் இருப்பதைப் பற்றி த்ரைத்தமான மூன்று ஆத்மாக்கள் விஷயம் எல்லா நாட்டுக்கு சேர்ந்தவர்களுக்கும், எல்லா மதத்தினர்களுக்கும் தவறாமல் மிக அவசியமாக தெரிய வேண்டியது இருக்கிறது. ஆனால் இதுவரை என் தாய் நாடான பாரத நாட்டிலும், மற்ற வெளிநாடுகளில் 194 நாடுகளிலும் மூன்று ஆத்மா விஷயங்கள், விவரம் சிறிதளவு கூட தெரியாது. வேறு நாட்டை விட்டு நம்முடைய பாரத நாட்டின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் பூர்வம் எல்லா தேசத்தை விட பாரத நாடு அதிகமாக ஆத்மா ஞானம் தெரிந்த நாடாக இருக்கிறது. சந்திரன் ஆத்ம ஞானத்திற்கு சின்னம் ஆனதினால் வாரத்தில் இரண்டாவது நாளாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டோம். இரண்டாவது நாளை திங்கட்கிழமை என்று சொல்கின்றோம். திங்கட்கிழமையை “இந்து” நாள் என்று கூட சொல்வார்கள். இந்து என்றால் சந்திரன் என்று அர்த்தம். அதன் பிரகாரமே “இந்து” என்றால் ஞானம் என்று கூட அர்த்தம். மதி என்றால் தெளிவு (புத்தி) என்று அர்த்தம். “இந்துமதி” என்றால் ஞானம் கொண்ட புத்தி என்று அர்த்தம். இந்த விதானத்தில் இந்துமதி என்று பெயர் கூட நமது நாட்டில் பல பேர் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். பூர்வம் எல்லா நாட்டை விட அதிகமாக ஆத்ம ஞானம் கொண்ட மனிதர்கள் நமது நாட்டில் அதிகமாக இருந்தார்கள். அதனால் பாரத நாட்டிற்கு இந்து நாடு என்று பெயர் வந்தது. பூர்வம் ஒரு நாள் இந்து நாடு என்று பெயர் அடைந்த நம்முடைய நாடு இன்று ஆத்ம ஞானம் இல்லாததாக ஹிந்து நாடாக மாறிப்போனது. “இந்து” என்ற சப்தத்திற்கு அர்த்தம் இருக்கிறது. “ஹிந்து” என்ற சப்தத்திற்கு அர்த்தம் இல்லை. நமது நாடு அர்த்தமில்லாத ஹிந்து நாடு அல்ல, அர்த்தமுள்ள இந்து நாடு என்னும் விவரமாக சொல்லினாலும் அர்த்தம் செய்து கொள்ளாத அஞ்ஞானிகள் சத்தியத்தை சொல்லியவர் மீது சண்டைக்குச் செல்கின்றார்கள். அனந்தபுரம் ஜில்லா குந்தகல்லு மண்டலத்தில் மத பக்தி தவிர, தெய்வ பக்தி இல்லாத

ஹிந்து மத தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர் அப்படிப்பட்ட வேலையை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமல்லவா!

இந்து நாடு ஹிந்து தேசமாக மாறியபோது, அந்த நாளும் இந்த நாளும் எப்போதும் பாரத நாடு இந்து நாடு தான். எதற்கு என்றால் இன்று கூட மூன்று ஆத்மாக்கள் த்ரைத்த ஞானத்தை பற்றி, மூன்று நாட்களான ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமை சிறப்பு பற்றி தெரிவிப்பது பாரத தேசத்தில் இருக்கின்றவர் மட்டும்தான். இன்று கூட இந்து நாடான பாரத நாட்டில் இருந்தே வெளிநாட்டுக்கு கூட ஆத்மா ஞானம் என்றால் என்னவென்று தெரிகின்றது. இப்போதும் கூட இந்து ஞானமே விஷ்வம் எல்லாம் இருந்ததற்கு பெரிய ஆதாரம் இருக்கிறது. அந்த ஆதாரம் என்னவென்றால்! ஞாயிறு, திங்கள், செவ்வாய் கிழமைகள் மூன்று எல்லா நாடுகளிலும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வாரத்திற்கு ஏழு நாட்கள், மாதத்திற்கு முப்பது நாட்கள் இந்து சம்பிரதாயம் பிரகாரம் இருக்கிறது. எல்லாவற்றை விட முக்கியமாக அமெரிக்காவிலும், ஆந்திராவிலும், முதல் நாளான சூரியன் நாளை சூரியன் பெயரிலேயே சன் (sun) என்னும், இரண்டாவது நாளான சந்திரன் நாளை சந்திரன் பெயரிலேயே மூன் (moon) என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதல் நாளான சூரியன் நாளை ஆங்கிலத்தில் சண்டே என்னும், இரண்டாவது நாளான சந்திரனை மூன்டே என்னும் அனைத்து வெளிநாடு காலண்டர்களில் இருக்கிறது. சிறிய தவறு என்னவென்றால் ஞாயிற்றுக்கிழமையை சண்டே (sun day) என்னும் எழுதியவர் இரண்டாவது நாளை மண்டே (mon day) என்று எழுதினார்கள். இதனை கவனித்தால் மண்டே இருக்கவேண்டிய இடத்தில் வாஸ்துவமாக மூன்டே இருக்க வேண்டும். காலம் கடந்து கொண்டிருக்கும்போது (moon day) என்னும் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு சைபரில் ஒரு சைபர் இல்லாமல் போய் ஒரு சைபர் மீதி இருப்பதினால் (mon day) மண்டே ஆனது. இது வெறும் காலம் கடந்து

கொண்டிருக்கும்போது நடந்த தவறானதாகும். தெலுங்கு பாஷையில் மட்டும் முதல் மூன்று நாட்கள் பெயர் இன்றும் கெட்டுப்போகாமல் அப்படியே இருக்கிறது.

சந்திரன் பூமிக்கு நெருங்கி இருப்பதினால், சூரியன் சந்திரன் விட தூரமாக இருப்பதினால் வாரத்தில் ஏழு நாட்களில் முதல் சூரியன் நாளான ஞாயிற்றுக்கிழமை (sun day) வைத்து இரண்டாவது நாட்களாக சந்திரன் நாளான திங்கட்கிழமை (moon day) வைப்பது என்ன? மற்றும் தூரத்தை ஆதாரம் செய்து கொண்டு முதல் திங்கட்கிழமையிலிருந்து பிறகு ஞாயிற்றுக்கிழமை வைப்பது சரியானது தானே! என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் என்னவென்றால்! இதற்கு முன் பேஜியில் கதிர்களை பொருத்து சூரியன் முதலாவதானவர் என்னும், சந்திரனை இரண்டாவதானவர், நட்சத்திரம் மூன்றாவது என்னும், இதனைப் பொறுத்து அவருக்கு சமமான ஜாடையில் சூரியனுக்கு ஜீவனை, சந்திரனை ஆத்மாவாக, நட்சத்திரத்தை பரமாத்மாவாக ஒப்பிட்டோம். தூரத்தைப் பொறுத்து பார்த்தால் சந்திரன் நெருங்கியவராக இருந்தாலும் வாரத்தில் சூரியனை முதலில் வைத்து ஞாயிற்றுக்கிழமையை முதல் நாளாக வைப்பதற்கு ஆன்மீக காரணம் இருக்கிறது என்று சொல்லலாம். அது என்னவென்றால்! சந்திரன் பூமிக்கு நெருக்கமாக இருப்பது போல், தேகத்திலும் கூட சந்திர சமமான ஆத்மா தேகமெல்லாம் வியாபித்து வெளி தோல் வரை, முடி வரை இருந்து வெளியில் மனிதர்களுக்கு நெருக்கமாக இருந்தாலும், தேகம் வெளியில் இருக்கின்ற உறுப்புக்கள் வரை வியாபித்து எல்லாவற்றையும் அசைய வைத்து வேலை செய்து இருந்தாலும் ஆத்மாவை யாரும் அருகில் அடையாளிக்கவில்லை. ஆத்மா தேகம் வெளியில் உறுப்புகள் வரை வியாபித்து இருந்து வேலையை செய்ய வைக்கின்றது என்று யாரும் நினைக்கவில்லை. பூமிக்கு சூரியன் தூரமாக இருப்பது போல், தேகத்திலும் கூட சூரியனுக்கு சமமாக ஜாடையாக இருக்கின்ற ஜீவன் வெளியே உலகத்திற்கு அதிக தூரமாகவும் தேகம் உள்ளே நிவாசிக்கின்றார். தலை மேல் பாகத்தில் (நெற்றியில்) தலை

உள்ளே குணசக்கரத்தில் சிக்கிக்கொண்ட ஜீவன் வெளியே உறுப்புக்களால் சம்பந்தமில்லாமல் தூரமாக இருந்தாலும், எந்த உறுப்புக்களையும் ஜீவன் அசைய வைத்து வேலையை செய்ய வைத்தாலும், ஜீவனே எல்லாம் செய்தது போல, ஜீவன் வெளியில் இருக்கின்ற தேகமாக இருப்பது போல் நினைத்துக் கொண்டு இருக்கிறான். ஒவ்வொருவரும் தேகமே நான் தான் என்னும், நானே தான் தேகம் என்னும் எண்ணத்துடன், இருப்பதினால் தூரமாக இருக்கின்ற சூரியனை முதல் நாளாக வைத்து, அருகில் இருக்கின்ற சந்திரனை இரண்டாவது நாளாக வைக்கப்பட்டது. தூரத்தைப் பொறுத்து உள்ளே இருக்கின்ற ஆத்மாவும், வெளியே இருக்கின்ற சந்திரனையும் எடுத்துக் கொள்ளாமல் வெளியே இருக்கின்ற வெளிச்சத்தை பொறுத்து, உள்ளிருக்கின்ற எண்ணத்தைப் பொறுத்து, முதல் ஞாயிற்றுக்கிழமையை பிறகு திங்கட்கிழமையை வைப்பது நடந்தது. இதனை யாராவது அல்லவென்று சொல்லுவார்களா? வெளியில் இருக்கின்ற வெளிச்சத்தை பொறுத்து, உள் எண்ணத்தை பொறுத்து பெரியோர்கள் நிர்ணயித்தார்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் நாள் என்னும், இதுதான் உலகமெல்லாம் இன்று கூட இருக்கிறது என்னும் தெரிந்த போது யாரும் அல்லவென்று சொல்ல மாட்டார்கள். இன்று சிறியதாக தெரிகின்ற இந்து சம்ஸ்கிருதி பூர்வம் உலகமெல்லாம் இருந்தது என்னும் இப்போது இருக்கின்ற சண்டே (ஞாயிற்றுக்கிழமை) என்று தெரிகின்றது.

சண்டே (ஞாயிற்றுக்கிழமை) முடிந்த பிறகு மூன்டே (திங்கட்கிழமை) வருகின்றது. மூன்டே (திங்கட்கிழமை) பிறகு ஸ்டார்டே (நட்சத்திர வாரம்) வரும். ஆனால் மூன்றாவது நாள் அப்படி ஸ்டார்டே என்று சொல்லாமல் டியூஸ்டே என்று சொல்கின்றார்கள். ஆங்கில பாஷையில் டியூஸ்டே என்றால் சிவப்பு கிரகம் கொண்ட செவ்வாய் கிரகம் என்று அர்த்தம். இது ஆங்கில பாஷையில் (இங்கிலீஷில்) இருக்கின்ற மூன்றாவது நாள் பெயர் இருக்கும்போது, தெலுங்கு பாஷையில் மூன்றாவது நாட்களுக்கு நட்சத்திரம் பெயர்

இருக்கிறது. நட்சத்திரம் எண்ணம் பிரகாரம் அதனை சுபகரமான நாள் என்று சொல்லி மங்களவாரம் என்று சொல்கின்றார்கள். இந்து நாடான பாரத நாட்டில் ஆத்ம ஞானத்தை அனுசரித்து முதல் மூன்று பெயர்கள் மூன்று நாட்களுக்கு இருக்கும்போது, வெளிநாடுகளில் நம்முடைய இந்து சம்ஸ்கிருதியை கண்ணாடியில் பார்த்தது போல் முதல் இரண்டு நாட்கள் சூரிய சந்திர நாட்களாகவே இருக்கின்றது.

ஷட் சாஸ்திரத்தில் ஆறாவது சாஸ்திரமான பிரம்ம வித்யா சாஸ்திரத்தில் என்றால் பகவத்கீதாவில் விஸ்வரூப சந்தர்சன யோகத்தில், **32** ஆவது சுலோகத்தில் **"காலோஸ்மீ"** என்ற வார்த்தையை கடவுள் உபயோகித்து கூறினார். காலோஸ்மீ என்றால் **"காலமும் நான்தான்"** என்று அர்த்தம். இதனைப் பொறுத்து கடவுள் தெரியாத கால சொரூபராக இருக்கிறார் என்று தெரிகின்றது. தெரியாத காலம் நம் முன்பே நொடி நொடியில் நடக்கின்றது மேலும் காலம் என்றால் என்னவென்று யாருக்கும் தெரியாது. அது மட்டுமல்லாமல் காலம் நம் முன்பே நாட்களாக, மாதமாக, வருடமாக நடந்து கொண்டிருக்கும் போதும், அது அர்த்தம் ஆகாமல் ஆனதினால் கடவுள் யாருக்கும் தெரியப்பட மாட்டார், தெரியமாட்டார் என்று சொல்லலாம். தெரியாத அபௌதிகமான காலத்தை பௌதிகமான கணக்கினால் நாளாக, மாதமாக, வருடமாக கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறோம். அகமியமான, அபௌதிகமான ஆகாசத்தில் பௌதிகமான சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் இந்த மூன்று எப்படி த்ரைத்தமாக தெரிகின்றதோ அதன் போலவே அபௌதிகமான காலத்தை கூட நாள், மாதம், வருடம் த்ரைத்தமாகவே தெரிகின்றது. அது மட்டுமல்லாமல் இன்னொரு விதமாக கவனித்தால் சிருஷ்டிகர்த்தாவான தெரியாத பரமாத்மா அண்டஜ, பிண்டஜ, உத்பஜ இந்த மூன்று தெரிகின்ற ஜீவாராசிகளாக பிரிந்து த்ரைத்தமாகவே இருக்கிறார்.

**1.தெரியாத ஆகாசம் ஒன்றானால் தெரிகின்ற சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் மூன்று த்ரைத்தமாக இருக்கிறது.**

**2.தெரியாத காலம் ஒன்றானால் தெரிகின்ற நாள், மாதம், வருடம் மூன்று த்ரைத்தமாக இருக்கிறது.**

**3.தெரியாத பரமாத்மா ஒன்றானால் தெரிகின்ற அண்டஜ, பிண்டஜ, உத்பஜ இந்த மூன்று த்ரைத்தமாக இருக்கிறது.**

இந்த மூன்றிலும் முதலாவதான சூரிய சந்திரனைப் பற்றி தெரிந்து கொண்டோம். **கிரகங்களான சூரிய சந்திரன் இயக்கங்கள் தெரிவிக்கும் நாட்கள், மாதங்கள், வருடங்கள். நாள், மாதம், வருடங்கள் காலத்தில் பாகங்கள் என்று தெரிந்து கொண்டோம் அல்லவா! காலமான கடவுளுக்கு 108 கோடி வருடங்கள் பகலாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் ஆறாவது சாஸ்திரத்தில் அக்ஷர பரப்பிரம்மா யோகம் என்னும் அத்தியாயத்தில் 17ஆவது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சுலோகங்களை பரிசோதனை செய்து பார்த்தால் தெரியப்படும். சுலோகங்களில் ஆயிரம் யுகங்கள் கடவுளுக்கு பகலாக சொல்லப்பட்டிருக்கிறது. யுகங்கள் இருப்பது நான்கு மட்டும்தான் அந்த நான்கு யுகங்களை 250 மடங்கு கணக்கு போட்டு பார்த்தால் கடவுளுக்கு ஒரு பகல் காலம் எத்தனை வருடமானது என்று தெரியும். கடவுளின் ஒரு பகல் காலம் உலகத்தின் ஆயுள் என்று தெரிகின்றது.**

| | | |
|---|---|---|
| **கலியுகம்.** | **4,32,000** | **வருடங்கள்** |
| **துவாபரயுகம்** | **8,64,000** | **வருடங்கள்** |
| **திரேத்தாயுகம்** | **12,96,000** | **வருடங்கள்** |
| **குர்த்தாயுகம்** | **17,28,000** | **வருடங்கள்** |

நான்கு யுகங்கள் கலந்து 43,20,000 வருடங்கள் ஆயிரம் யுகங்களுக்கு மொத்தம் 108 கோடி வருடங்கள் ஆகின்றது. 108 கோடி வருடங்கள், காலம் கணக்கில் (கடவுள் கணக்கில்) ஒரு நாளாக கணக்கிடப்படுகின்றது. கடவுளின் ஒரு பகல் மட்டும் உலகம் ஆயுளாக நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆறாவது சாஸ்திர முறையான உலகம் ஆயுள் எல்லோருக்கும் தெரியும்படி 108 கோடி எண்ணிக்கையை முக்கியமாக பல சந்தர்ப்பங்களில் நாம் பயன்படுத்துகின்றோம். 108 எண்ணிக்கை சிருஷ்டி இருக்கும் காலத்தைப் பற்றி தெரிவிக்கின்றது. அதனால் இந்த எண்ணிக்கை எல்லோருக்கும் தெரியும்படி ஒவ்வொரு மதத்திலும் ஜெபமாலையில் உபயோகித்தது போல் செய்து, அந்த ஜெபமாலையில் 108 பாசிகள் இருக்கும் படி கடவுள் வைத்தார். ஒவ்வொரு மனிதனில் குணங்கள் எண்ணிக்கை 108 எண்ணிக்கை இருக்கும்படி செய்த கடவுள், 108 குணங்கள் ஜீவராசி 108 கோடி வருடம் சிருஷ்டியில் ஜீவிக்கும்படி செய்தார். 108 கோடி வருடங்கள் பிறகு பேரழிவு ஏற்படும். அப்போது சர்வமும் நாசனமாகும். அதனால் உலகம் ஆயுளை யாரும் மறக்க கூடாது என்பது போல் ஜெபமாலையில் 108 பாசிகள் இருப்பது மட்டுமல்லாமல், தானம் கொடுக்கும் நேரத்தில் 108 ரூபாய் கொடுக்கும்படி, பூஜை செய்யும் நேரத்தில் 108 பூக்களில் பூஜை செய்யும்படி செய்தார்கள். அதன் போலவே ஒவ்வொரு மந்திரத்தை 108 தடவை ஜெபம் செய்யும்படி செய்தார்கள். திருமண நேரத்தில் கொடுக்கும் அன்பளிப்பையும் கூட 108 எண்ணிக்கையில் கொடுப்பார்கள். இப்படி வெளியே சமூகத்தில் 108 எண்ணிக்கைகள் பல சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துகின்றோம்.

இருந்தாலும் 108 எண்ணிக்கை உலகம் ஆயுள் என்று இன்று பலபேருக்கு தெரியாமல் போனது. பூர்வம் ஞானம் தெரிந்தவர்கள் 108 எண்ணிக்கை பல இடத்தில் அடையாளமாக வைத்துக்கொண்டு, இன்று ஞானம் தெரியாதவர்கள் அந்த எண்ணிக்கையை 101 ஆக மாற்றி கொண்டார்கள். சிலர்கள் 116 ஆக மாற்றிக் கொண்டார்கள். இதன் போன்று உள்ளவர்களை பார்த்த கடவுள் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு போகும் ஆம்புலன்ஸ் வேன்மீது 108 எண்ணிக்கை அடையாளித்து உன்னுடைய ஆயுள் இவ்வளவுதான் என்று அடையாளம் இருக்கும்படி செய்தார். உனக்கு ஆபத்தான நிலை 108 எண்ணிக்கையில் இருக்கிறது என்னும், ஆபத்தான

நிலையில் செய்ய வேண்டிய போன் நம்பர் கூட 108 ஆகவே வைத்தார். எதுவாக இருந்தாலும் 108 எண்ணிக்கை உலகத்தின் மொத்தம் ஆயுள் என்று மனிதன் மறந்து போனான். 108 கோடி வருடங்கள் சஜீவமாக இருக்கின்ற பிரக்ருதி, 108 கோடி வருடங்கள் பிறகு பேரழிவு அடைந்து விஸ்வமெல்லாம் இல்லாமல் போகும். 108 கோடி வருடங்கள் விஸ்வமில்லாத இடைவெளிக்கு பிறகு மறு படியும் சிருஷ்டி ஏற்படுகின்றது.

மறுபடியும் புதியதாக ஏற்படும் சிருஷ்டி இப்போது எப்படி இருக்கின்றதோ அதன் போலவே இருக்கும். அப்போது கூட மூன்று ரகம் தேகத்திலே ஜீவராசிகள் பிறக்கின்றது. அதுவே த்ரைத்தம் பிரகாரம் அண்டஜ, பிண்டஜ, உத்பஜங்கள். ஆகாசத்தில் சூரிய, சந்திரன், நட்சத்திரங்கள் காலம் அளவுகளில் நாள், மாதம், வருடங்களாக இருக்கும்போது, நாள், மாதம், வருடங்கள் ஜீவராசிகளான அண்டஜ பிண்டஜ உத்பஜங்களுக்கு ஆயுளின் அளவாக இருக்கின்றது. இதன் போன்று ஒன்றின் ஒன்று சம்பந்தபட்டு இருக்கின்றது. பூமி மீது தெரிகின்ற ஜீவராசிகள் இருக்கும்போது, ஆகாசத்தில் தெரிகின்ற கிரகங்கள் இருக்கும்போது, நடுவில் தெரியாத காலம் தெய்வத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. தெரியாத காலம் நாள், மாதம், வருடங்கள் அளவில் இருக்கின்றது. அப்படிப்பட்ட நாளுக்கு ஏழு பெயர்கள், மாதங்களுக்கு 12 பெயர்கள், வருடங்களுக்கு 60 பெயர்கள் நம் பெரியோர்கள் வைத்தார்கள். ஏழு நாட்களுக்கு ஒவ்வொரு நாளுக்கு இறுதி நாட்கள் என்னும் ஏழு பெயர் இருப்பது, ஒவ்வொரு மாதத்திற்கு இறுதி மாதம் என்னும் 12 பெயர்கள் இருப்பது, அதன் போலவே வருடங்களுக்கு இறுதி வஸ்திரங்கள் என்னும் 60 பெயர்கள் இருப்பது கவனிக்கலாம்.

காலத்திற்கு வாரம், மாதம், வருடம் பெயர் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இங்கு காலம் கடந்து கொண்டிருக்கும் போது **“மூச”** என்ற சொல் மாச

என்று மாறியது. அதனால் எல்லோருக்கும் தெரிந்த மாதம் பெயரை நாம் கூட சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதன் போலவே **"யோகம்"** என்ற சொல் **"யுகம்"** சொல்லாக மாறிப்போனது. அதனைக் கூட நாம் யுகம் என்னும் சொல்லாகவே சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்று கிரகிக்க வேண்டும். உதாரணத்திற்கு சித்திரை மூசம் சித்திரை மாசமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த விதமாகவே கலியோகத்தை கலியுகமாக எழுதுகின்றோம். காலத்தில் ஒவ்வொரு ஜீவராசிகள் பிறக்கின்றது. என்றால் தெய்வம் ஒவ்வொரு ஜீவராசிகளை சிருஷ்டிக்கின்றார் என்று நேரடியாக தெரிகின்றது. தெரியாத தெய்வம் ஒவ்வொரு ஜீவராசியை வித்தியாசம் உள்ள உருவத்தில் பிறக்க வைக்கின்றது. அதனால் காலத்திற்கு வாரம், மாதம், வருடம் என்று பெயர் வைக்கப்பட்டது. வாரம் என்றால் வித்தியாசம் உள்ள, மாதம் என்றால் உருவமாக, வருடம் (வஸ்ரம்) என்றால் பிறக்க வைப்பது என்று அர்த்தம். இந்த அர்த்தம் பிரகாரம் பிறந்த மனிதன் மனிதனுக்கு வித்தியாசமாக உருவங்கள் உள்ளது என்று எல்லோருக்கும் தெரிகின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் சிறிதாவதும் முகத்திலேயே எத்தனையோ வித்தியாசங்கள் இருப்பது எல்லோரும் கிரகிக்கலாம். இதனினால் ஒவ்வொரு மனிதன் வாராக (வித்தியாசம்) மூச (முத்திரை) போடப்பட்ட உருவத்தில் வஸ்தரிம்பபடு (பிறக்கின்றான்) என்று தெரிகின்றது. இங்கு வாரத்திற்கு ஏழு பெயர்கள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். நாட்களுக்கு ஏழு பெயர்களே எதற்கு வைத்தார்கள்? கேள்வி வந்தால் அந்த கேள்விக்கு பதில் இந்த விதமாக தெரிகின்றது.

பூமி மீது இருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் வெளியே தெரிகின்ற சூரிய சந்திர நட்சத்திரங்கள் வெளிச்சத்திலும், உள்ளே தெரியாத மூன்று ஆத்மாக்கள் விளைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெளியே இருக்கின்ற கிரகங்கள் ஒளிக்கதிர்கள் ஏழு வித்யாசங்களாக (நாட்களில்) இருக்கிறது. அதன் போலவே உள்ளே ஆத்மா விளைவுகள் கூட ஏழு நாட்களாக (வித்தியாசங்களாக) இருக்கிறது. ஒளிக்கதிர்கள் பிரித்தால் ஏழு விதமான வண்ணங்கள்

தெரிகின்றது. ஆத்மா சக்தியை பிரித்தால் ஏழு நாடி மையத்தில் ஏழு ரகங்கள் சக்தியாக இருக்கின்றது. அதனால் மனிதன் ஜீவிக்கின்ற நாளுக்கு ஏழு நாட்கள் பெயர் வைக்கபட்டது. அந்த ஏழு பெயர்களில் முன் இருக்கின்ற மூன்று பெயர்கள் சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் சம்பந்தம் கொண்டு இருப்பது கவனிக்க வேண்டிய விஷயம். தற்போது காலத்தில் நாகரிகம் என்னும் பெயரில், விஞ்ஞானம் என்னும் படிப்பில் அஞ்ஞானத்தில் மிதங்கி போகின்ற மனிதன், ஞாயிறு, திங்கள், செவ்வாய் நாட்களுடைய சிறப்பை புறக்கணித்தவர்கள், தனக்கு சம்பந்தப்பட்ட ஞானத்தை தன் தெரிந்து கொள்ளாமல் போனார். விஞ்ஞானம் கொண்டு சுகத்தில் மிதங்கியவர்கள் இன்று இருக்கின்ற மனிதர்களை விட ஆத்மா ஞானம் தெரிந்து ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமையின் அர்த்தத்தை தெரிந்த பூர்வம் இருந்த மனிதர்களே எவ்வளவோ சிறந்தவர்கள் என்று தெரிகின்றது.

ஒவ்வொரு மனிதன் வித்தியாசம் கொண்ட முகத்துடன், வெவ்வேறு வடிவத்துடன், பிறக்க வைத்தார் என்று எல்லாருக்கும் தெரியும். அப்படிப்பட்ட மனிதன் சூரிய, சந்திர, நட்சத்திர மூன்று கிரகம் ஒளிகதிர்வில், மூன்று ஆத்மாக்கள் விளைவுகளில் வாழ்கின்றார்கள். தெய்வம் ஆகாசத்தில் பௌதிகமாக தெரிகின்ற இரண்டு கிரகங்களாக, ஒரு கிரகம் நட்சத்திரமாக தேகத்தில் தெரியாத மூன்று ஆத்மாக்களாக இருக்கிறார் என்று சொல்லிக் கொண்டோம் அல்லவா! இதனைப் பொறுத்து ஒவ்வொரு மனிதனும் இந்த பக்கம் வெளியில் உள்ள கிரகத்தினால், அந்த பக்கம் உள்ளே ஆத்மாக்களினால் மொத்தமாக தெய்வத்தினால் வாழ்கின்றான் என்று தெரிகின்றது.

| | | |
|---|---|---|
| *தெய்வம் தெரிகின்ற விதமாக சூரிய சந்திர* | } | |
| *நட்சத்திரங்களாக தெய்வம் தெரியாத விதமாக* | } | *பிரிக்கப்பட்டிருக்கின்றது.* |
| *ஜீவாத்மா ஆத்மா பரமாத்மாத்தமாக்களாக* | } | |

தெய்வ விளைவுகளில் இந்த பக்கம் வெளியில், அந்த பக்கம் உள்ளே வாழ்கின்ற மனிதன் வெளியில் சூரிய, சந்திர, நட்சத்திரங்களை, உள்ளே ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மாக்களை தெரிந்து ஆராதனை செய்வது த்ரைத்தாராதனை என்று சொல்கின்றோம். த்ரைத்தாராதனையில் வெளியில் சூரிய சந்திர நட்சத்திரங்கள் அடையாளமாக ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மூன்று ஆத்மாக்களை ஆராதனை செய்வது த்ரைத்தாராதனை என்று சொல்கின்றோம். சிலர் பெரியோர்கள் ஞானத்தை தத்துவத்தை பாட்டு வடிவத்தில் பாடிய போது "மூன்று நாள் வாழ்க்கைக்கு சந்தோசப்படுவது எதற்கு ஜீவா" என்று பாடி இருப்பது கேட்டிருப்போம். இதனைப் பொறுத்து நம்முடைய வாழ்க்கை மூன்று நாட்கள் தானா என்று யோசனை செய்து பார்த்தால் ஒரு நாள் பிறப்பதற்கு, ஒரு நாள் ஞானம் தெரிந்து கொள்வதற்கு, ஒரு நாள் மோக்ஷம் அடைவதற்கு என்று தெரிகின்றது. முதல் நாள் ஜீவன் பிறந்தால் இரண்டாவது நாளை ஆத்மாவை தெரிந்து கொண்டு மூன்றாவது நாள் பரமாத்மாவை சேர வேண்டும் என்று கூட தெரிகின்றது. அதனால் சிலர் கவிகள் பெரியோர்கள் **"எவ்வளவோ சிறியது வாழ்க்கை, இன்னும் சிறியது இளமை"** என்று சொல்லினார்கள். இந்த விஷயம் உயிரோடு இருக்கின்றவர்கள் தெரிந்து கொள்ளுவதற்காக இறந்தவருக்கு மூன்றாவது நாளை செய்வார்கள். இதனைப் பொறுத்து நமக்கு தெரிந்தாலும், நமக்கு தெரியாமல் இருந்தாலும் வாழ்க்கை மூன்று நாள் முச்சட (பேசுவது) என்று தெரிகின்றது. முச்சடின்சடமு என்றால் ஒரு விஷயத்தைப் பற்றி பேசுவது என்று அர்த்தம். மூன்று நாட்கள் முச்சட என்றால் ஞாயிறு, திங்கள், செவ்வாய் இந்த மூன்று நாட்களின் விஷயங்களை தெரிந்து கொள்வது என்று அர்த்தம். அப்படி தெரிந்து கொள்ளாமல் போனால் உலகத்தில் யார் எந்த நிலையில் வாழ்ந்தாலும் அவருடைய வாழ்க்கை வீணானது என்று தெரிகின்றது. அதனால் பூமி மேல் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் எந்த மதத்திற்கு சேர்ந்தவனாக இருந்தாலும் த்ரைத்தாராதனை பற்றி தெரிந்து தீர வேண்டியது தான் மற்றும் செய்து தீர வேண்டியது தான். இது ஆத்மாக்களுக்கு

சம்பந்தப்பட்ட ஞானமானதினால் மனிதர்கள் எல்லோருக்கும் தேவைப்படுவதால், மதத்திற்கு சம்பந்தமில்லாத நடைமுறை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

வெள்ளை வஸ்திரம் தலைமீது **சூரியன் உதிப்பதற்கு ஐந்து நிமிடம் முன்பு பிரார்த்தனையில் உட்கார வேண்டும். சூரியன் உதிக்கும் போது பிரார்த்தனையில் இருக்க வேண்டும் என்பது ஞாயிறு (ஆதி) பிரார்த்தனையின் விதி.** சூரியன் உதித்த பிறகு ஐந்து நிமிடம் பிரார்த்தனையிலிருந்து பிரார்த்தனை நேரம் பத்து நிமிடம் இருக்கும் படி பார்த்துக் கெள்ள வேண்டும். பிரார்த்தனை நேரத்தில் இடது அஸ்தம் (கை) தாடிக்கு கீழ் வைத்து கொள்ள வேண்டும். அதன் போலவே வலது கை அஸ்தத்தை தலைமேல் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்துக் கொள்ளுவதினால் நினைவு எல்லாம் தலை மத்தியில் ஏற்படும். மேல் கீழ் கைகளை வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்து இருப்பதினால் மனோ பார்வை தலை நடு பாகத்தில் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஞாயிற்றுக்கிழமை சூரியன் உதயம் நேரத்தில் செய்யும் பிரார்த்தனை சிருஷ்டி ஆரம்பத்தை தெரிவிப்பது மட்டுமல்லாமல், உன்னுடைய பிறப்பு ஞாபகத்தை தெரிவிக்கின்றது. புதியதாக பிறந்தவனுக்கு, அவனுடைய தலையில் எந்த குணமும் இல்லாமல் இருக்கும். பிறந்த குழந்தைக்கு எந்த குணங்கள் இல்லாததால் மேலும்

குழந்தையை கடவுளுக்கு சமமானதாக சிலர் வர்ணித்தார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில், சூரிய உதயத்துடன் குழந்தை பிறப்புக்கு சமமானது ஆனதினால், அந்த நேரத்தில் குழந்தை தலையில் குணங்கள் இல்லாதது போல் ஆராதனை செய்கின்றவர் தலையிலும் கூட எந்த குணங்கள் சங்கல்பம் இல்லாமல் இருக்க வேண்டும். அந்த பத்து நிமிடம் அப்படி இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறந்த குழந்தைக்கு சமமாக இருக்கின்ற ஆராதனை ஆனதினால், இது பகவத்கீதாவில் சொல்லிய பிரம்மயோகம் சாதனையாகும். த்ரைத்தாராதனை சமயத்தில் முதலாவதான ஆதி பிரார்த்தனை முதல் நாளாக ஞாயிற்றுக்கிழமை செய்வது மட்டுமல்லாமல் பிரம்ம, கர்ம, பக்தி யோகம் என்னும் மூன்று யோகம் முறையில் முதலாவதான பிரம்மயோகம் அனுசரிக்கின்றது போல் ஆகும். இணைந்து செய்கின்ற பிரார்த்தனை ஆனதினால் எல்லோரும் ஒரே தடவையாக ஆரம்பித்து ஒரே தடவை முடிப்பதற்கு மற்றும் எல்லோரும் பத்து நிமிடம் வரை பிரார்த்தனை செய்வதற்கு சாதகமாக இருக்கும் படி பூர்வம் கடவுளுடைய விதை எழுத்துகளினால் **“ஓம்”** காரநாதத்தால் ஆரம்பித்து இறுதியில் அதே நாமத்தால் முடிப்பார்கள். காலையில் ஆதி பிரார்த்தனை பிறகு யாருடைய வேலை அவர்கள் செய்து கொள்ளலாம். இந்த விதமாக எத்தனையோ சாராம்சம் கொண்ட, ஆச்சாரத்தில் இருந்த ஆதி பிரார்த்தனை காலகர்ப்பத்தில் கலந்து போனது. மறுபடியும் அதை மீண்டும் அதனைக் கொண்டு வந்து பூர்வம் இருந்த ஆச்சாரத்தை எல்லோரும் இணைந்து நடத்துவோம்.

## *மத்திய ஆராதனை*

மத்திய ஆராதனை மதியம் சரியாக 12 மணி நேரத்தில் சூரியன் நடு உச்சியில் இருக்கும் போது செய்ய வேண்டும். ஞாயிறு பிரார்த்தனையில் கிழக்கு திசையில்

திரும்பி உட்கார்ந்து, திங்கட்கிழமை மத்திய பிரார்த்தனையில் தெற்கு திசையில் திரும்பி உட்கார வேண்டும். முதலில் பிரார்த்தனையில் இருந்தபடி திங்கட்கிழமை மத்திய பிரார்த்தனையில் கூட தலை மீது துணியை கட்டிக் கொண்டு கையையும் வைத்துக் கொள்ள வேண்டும். மத்திய பிரார்த்தனை இரண்டாவது நாளான திங்கட்கிழமை செய்ய வேண்டும். திங்கட்கிழமை தெய்வக் ஞானத்திற்கு சம்பந்தப்பட்ட நாளானதினால் பிரார்த்தனை நேரத்தில் தலையில் ஞானத்தின் நினைவு கொண்டு அவருக்கு ஏற்படும் ஒவ்வொன்றும், அவரால் செய்யப்படும் ஒவ்வொன்றும், அவர் அனுபவிக்கும் ஒவ்வொன்றும் கர்ம நிர்ணயம் பிரகாரம் நடக்கின்றது அவருடைய முயற்சி எதுவும் இல்லை என்று நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். பிரார்த்தனை நேரத்திலும் கூட பத்து நிமிடம் இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஞாயிறு பிரார்த்தனை ஆரம்பித்தபடி எல்லோரும் “ஓம்” சப்தத்தில் ஆரம்பித்து “ஓம்” சப்தத்தில் முடிக்க வேண்டும். ஓம் சப்தத்தை முதல் சொல்வதற்கு மற்றும் பிரார்த்தனை இறுதியில் சொல்லுவதற்கு முதலிலேயே அந்த கூட்டத்தில் ஒருவரை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். மத்திய பிரார்த்தனை மத்தியானமே செய்ய வேண்டும். ஏதாவது வேலையினால், ஆரோக்கியம் நன்றாக இல்லாமல் போனால் வேறு நேரத்தில் ஆவது தவறாமல் செய்ய வேண்டும். திங்கட்கிழமை பிரார்த்தனைக்கு கூட ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை போல் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். திங்கட்கிழமை மத்திய பிரார்த்தனையில் திசை, எண்ணம் தவிர எல்லாம் ஞாயிறு பிரார்த்தனையில் எப்படி செய்தோமோ அதன் போலவே செய்ய வேண்டும்.

மத்திய பிரார்த்தனை ஜீவித ஞானத்திற்கு சம்பந்தப்பட்டதினால் உலகத்தில் பாத்திரனாக நடந்து கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் தன்னை நடத்தும் சூத்திரம் கர்மம் தான் என்னும், கர்ம சூத்திரம் பிரகாரமே அசைகின்றது போல் அசைகின்றது சுயமாக நான் அசைகின்ற சுதந்திரமானவன் அல்லவென்று ஞானம் கொண்டு இருப்பது

போல் மத்திய பிரார்த்தனை ஏற்பட்டிருக்கிறது. மத்திய பிரார்த்தனையில் நான் கர்மத்தால் இருப்பவன் என்னும், ஒவ்வொரு வேலை நான் செய்கின்றது அல்ல என்னால் செய்யப்படுகின்றது என்பதும், என்னால் நடக்கப்படுகின்ற காரியம் நான் செய்வது அல்லவென்று யோசிப்பதால் மனிதன் ஜீவிதத்தில் கூட அதே ஞானம் ஞாபகம் இருந்தால், எந்த கர்மத்தையும் ஒட்டிக் கொள்ள முடியாது. மத்திய பிரார்த்தனை அகம் இல்லாத விதானத்தையும் பழக்கத்தையும் செய்கின்றது. இந்த பழக்கத்தை பகவத்கீதாவில் கூறிய இரண்டாவதான கர்மயோகம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பிறந்ததிலிருந்து ஒவ்வொரு மனிதனும் இறப்பு பக்கம் பயணிக்கின்றான். ஜென்மத்திலிருந்து ஒவ்வொரு மனிதன் ஜீவிதம் மரணம் பக்கம் போகின்றது. மரணத்திற்கு அதிபதி பரமாத்மா என்னும், அவர்தான் எமன் என்னும் அவருடையது தெற்கு திசை என்னும் சொல்லிக் கொண்டது போல் தேகத்தில் ஜீவாத்மா வலது பக்கம் துவாரத்தினால் மோக்ஷம் அடைய வேண்டியது இருக்கும். ஜீவனுக்கு மரணம், மோக்ஷம் காலசக்கரத்தில் வலது பக்கம் துவாரத்தினால் நடக்கிறது. இந்த விஷயம் எங்களால் எழுதப்பட்ட **"த்ரைத்த சித்தாந்த பகவத்கீதாவில்"** அக்ஷர பரப்பிரமயோகம் என்னும் அத்தியாயத்தில் மற்றும் **"பிரபோதா"** கிரந்தத்தில் "பிரம்மா, கால, கர்ம, குணசக்கரங்கள்" என்ற கட்டுரையில் விவரமாக சொல்லப்பட்டது. ஜீவித பயணம் மரணம் அல்லது மோக்ஷம் பக்கம் ஆனதினால் அவற்றின் துவாரங்கள் வலது பக்கம் இருப்பதினால் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு பக்கம் உட்கார்ந்திருப்பவர்கள் இரண்டாவது நாள் திங்கட்கிழமை வலது கை பக்கம் திரும்பி தெற்கு பக்கம் உட்கார வேண்டும். மத்திய ஆராதனை திங்கட்கிழமை என்பதால் அதனால் ஞானத்தின் நினைவு கொண்டு, ஞான சேரும் இடம் வலது பக்கம் ஆனதினால் தெற்கு திசைக்கு திரும்பி உட்காருவது தனித்துவம். திங்கட்கிழமையின் ஆராதனை விவரம் தெரிந்து அனுசரிக்கின்ற நபர் பிறகு அதே ஞாபகத்தால் கர்ம யோகத்தை அனுசரிப்பார். ஜீவிதத்தில் கர்ம யோகம் அனுசரிப்பதை பழக்கபடுத்திக் கொள்வதால்,

பகவத்கீதாவில் கடவுளே சொல்லியது போல் **எக்ன கர்மம்** அனுசரிப்பது போல் ஆகும். எக்ன கர்மம் என்றால் வரப்போகும் கர்மத்தை எரித்து விடுவது என்று அர்த்தம். கர்மம் ஒட்டாத விதானம் திங்கட்கிழமை அனுசரிக்கின்ற மத்திய ஆராதனையினால் சாத்தியமாகி மனிதன் மோக்ஷத்தை அடையலாம். ஞாயிற்றுக்கிழமை செய்யும் சூரிய உதயம் பிரார்த்தனையில் பிரம்மயோகம், திங்கட்கிழமை மத்தியானம் செய்யும் மத்திய பிரார்த்தனையில் கர்மயோகம் பழக்கமாகும். த்ரைத்தாராதனையில் பாகங்களான ஞாயிறு, திங்கட்கிழமை பிரார்த்தனையில் இவ்வளவு விசேஷம் இருக்கும்போது மூன்றாவது பிரார்த்தனைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

# *இறுதி ஆராதனை*

ஆதி பிரார்த்தனை நாளில் முதலாவதான ஞாயிற்றுக்கிழமை செய்யும்போது, மத்திய பிரார்த்தனை நாளில் வாரத்தில் இரண்டாவது நாளான திங்கட்கிழமை செய்யும்போது, இறுதி பிரார்த்தனை வாரத்தில் மூன்றாவது நாளான செவ்வாய்க்கிழமை செய்யப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமை ஜீவனுடைய பிறப்பு, திங்கட்கிழமை ஜீவிதத்தில் தெய்வ ஞானத்தை தெரிவிப்பது, செவ்வாய்க்கிழமை நேரடியாக மோக்ஷத்தையே தெரிவிக்கின்றது. சுபபிரதமான மோக்ஷத்தை தெரிவிக்கும் ஆராதனை மூன்றாவது நாளான மங்கள பிரதமான (மங்கள நாள்) செவ்வாய்க்கிழமை செய்யப்படுகின்றது. செவ்வாய்க்கிழமை செய்கின்ற இறுதி ஆராதனையால் மொத்தம் த்ரைத்தாராதனைகள் முடிகின்றது. த்ரைத்தாராதனையில் இறுதியான இறுதி ஆராதனை கூட வெள்ளை துணியை தலை மேல் வைத்து, வலது கை தலைமேல், தாடிக்கு கீழ் இடது கை வைத்துக் கொண்டு

ஆதி, மத்திய ஆராதனை போலவே செய்ய வேண்டியது இருக்கும் இறுதியான கடைசி ஆராதனை செவ்வாய்க்கிழமை சூரிய அஸ்தமனத்தில் செய்ய வேண்டும். **சூரியன் அஸ்தமனத்ததிற்கு முதலில் ஐந்து நிமிடம் இருக்கும் போது ஆரம்பித்து அஸ்தமனத்திற்கு பிறகு ஐந்து நிமிடம் இருக்கும் படி செய்ய வேண்டும்.** மொத்தம் பத்து நிமிடம் பிரார்த்தனை நேரத்தில் மற்ற பிரார்த்தனைகள் போலவே துணி மற்றும், கையை வைத்து உட்கார்ந்திருக்கும் திசை, தலையில் நோக்கம் வேறாக இருக்கும். செவ்வாய்க்கிழமை சூரிய அஸ்தமனத்தின் நேரத்தில் செய்யும் பிரார்த்தனை மேற்கு திரும்பி செய்ய வேண்டும். பிரார்த்தனை நேரத்தில் பகவத்கீதாவில் சொல்லிய பக்தி யோகத்தை நினைவுக்கு கொண்டு வர வேண்டும். உலகம் அனைத்திற்கும் கடவுளான புருஷோத்தமனே பெரியவர் என்னும், பரமாத்மாவை விட மற்றவை யார் மீதும் பணிவு இல்லை என்னும், கடவுள் மீது இருந்த பக்தியே கடவுள் அம்சம் கொண்ட பகவான் மீதும் கூட இருக்கிறது என்னும், சிருஷ்டி கர்த்தா, பரலோக ராஜாதிபதியான பரமாத்மாவே சர்வலோகத்தை ஷாஷிப்பவர் என்னும், ஆதி மத்திய இறுதி இல்லாதவர் கடவுள் என்னும், கடவுள் மீது முழுமையாக இஷ்டம் விசுவாசம் கொண்டு கடவுளில் ஐக்கியம் ஆகுவதே பிரார்த்தனையில் முக்கியமான நோக்கம்.

ஆனால் தற்போது காலத்தில் இந்து மதம் ஹிந்து மதமாக மாறிப்போய் ஏகேசொருபாசன (ஓரிறைக் கொள்கைக்கு) ஸ்தானத்தில் பல தேவதைகள் ஆராதனை ஏற்பட்டது. சூரிய அஸ்தமனத்தில் ராத்திரி ஆரம்பம் ஆகின்றது. சூரிய அஸ்தமனம் மனிதனின் அஸ்தமனத்தை தெரிவிக்கின்றது. ஜீவனுடைய இறுதி மோக்ஷம் என்னும், தேகம் இறுதி மரணம் என்னும் தெரிந்து அந்த இரண்டையும் தெரிவிப்பது சூரியன் அஸ்தமிப்பது ஆகுவதால் சூரியன் அஸ்தமிக்கும் திசைக்கு திரும்பி என் அஸ்தமனம் உன்னில் ஐக்கியமாக வேண்டும் என்னும் கோரிக்கையால் பிரார்த்தனை செய்வதே **இறுதி பிரார்த்தனை** என்று சொல்கின்றோம். இறுதி பிரார்த்தனை மோக்ஷத்திற்காக இருக்க வேண்டும்.

விசாலமான கடவுளில் இணைந்து போய் தெரியாமல் போவது போல் நோக்கம் கொண்டு செய்வது இறுதி பிரார்த்தனையின் அர்த்தம், நோக்கம். மனிதனுடைய கம்யம் இறுதிக்கு மோக்ஷம் ஆனதினால் செவ்வாய்க்கிழமையே செய்வது நடக்கின்றது. **ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் ஆதி, மத்திய இறுதி காலம் மேலும் காலை, மத்தியானம், மாலை நேரங்களில் பிரம்ம, கர்ம, பக்தி யோகத்தை அனுசரிப்பது த்ரைத்தாராதனை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.**

**ஞாயிற்றுக்கிழமை -- காலை -- கிழக்கு -- பிரம்மயோகம்.**

**திங்கட்கிழமை -- மத்தியானம் -- தெற்கு -- கர்மயோகம்.**

**செவ்வாய்க்கிழமை -- மாலை -- மேற்கு -- பக்தியோகம்.**

மூன்று யோகத்தில், மூன்று நாட்களில் மூன்று காலத்தில், மூன்று திசைகளில் கடவுளை ஆராதிப்பது த்ரைத்தாராதனை. த்ரைத்தாராதனை பிரபோதா சேவா சமிதி அவர்கள் மட்டுமல்லாமல் எல்லோரும் அனுசரிப்பது நன்றானது.

த்ரைத்தாராதனை செய்கின்றவர்கள் முக்கியமாக பரமாத்மா ஞானம் தவிர எல்லா தேவதை ஆராதனைகளை விட்டு விட வேண்டும். த்ரைத்தாராதனை மூன்று நாட்கள், மொத்தம் விஸ்வத்தை சிருஷ்டித்து நடத்தும் சுயம் சக்தி கொண்டவரான பரமாத்மா ஆராதனையில் கூடி இருக்கின்றதினால், எல்லாவற்றை விட பெரிய, உண்மையான சிருஷ்டி கர்த்தா கடவுள் என்னும் தெரிந்த பிறகு வேறு கடவுள்களை அனுசரிப்பது பரமாத்மாவை நாம் சரியாக அர்த்தம் செய்து கொள்ளவில்லை என்று அர்த்தம். கடவுளுடைய மகத்துவம் தெரியாதவர்கள் வேறு கடவுள்களை அனுசரிப்பார்கள். தெரிந்து கொண்டிருக்கும்போது எட்டிப் பார்ப்பது தேவையில்லை அல்லவா! அதன் போலவே கடவுளுடைய ஞானம் தெரிந்த போது வேறு கடவுளைப் பற்றி யோசனை செய்ய மாட்டார்கள்

அல்லவா! வேறு கடவுள்களை மனிதன் உருவாக்கிக் கொண்டதால் அந்த கடவுளும் கூட நம்மை போல ஜீவன் தான் என்னும், நாம் பிறந்தது போல அவர்களும் கூட பிறந்தார்கள் என்று பல பேருக்கு தெரியாது. பூர்வம் பெரியோர்கள் பரமாத்மாவை தெரிவிக்கும் ஞானம் தெரிவிப்பதற்காக காட்சி வடிவமான தேவாலயங்களை சிருஷ்டித்தார்கள். தேவாலயங்கள் ரூப நாமங்கள் பூர்வம் தெய்வ ஞானத்தால் நிர்மிக்கப்பட்டது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது அந்த நாள் நோக்கமும், ஞானமும் தெரியாமல் போனதினால் வேறு நோக்கத்தில் மனிதன் பலவிதமான கடவுள்களை தயார் செய்து கொண்டான். அர்த்தமில்லாத முறைகளில் மிதங்கி போனார்கள். இப்படிப்பட்ட முறைகளை, பக்தியை, பகவத்கீதாவில் தாமச முறை, தாமச பக்தி என்று சொல்லப்பட்டது. செலவு கஷ்டம் இல்லாத பரமாத்மா ஆராதனைகளை விட்டு செலவு, கஷ்டமாக இருக்கின்ற பலவிதமான வேறு தேவதை ஆராதனையை மனிதன் சேர்த்துக் கொண்டான். கடவுள் தவிர வேறு தேவதை ஆராதனையை மாயா தூண்டுகின்றதை தெரியாததினால் அவற்றில் சிக்கிக் கொண்டு போய் பரமாத்மா ஞானத்திற்கு தூரமாகி போகின்றான். எல்லா தேவதைகள் தேவாலயங்கள் கட்ட வைத்தவர்கள் முதலில் அந்த தேவதைகளை பூஜை செய்கின்றவர்கள் அனைவரும் எங்களை விட மீறிய பக்தன், எங்களை விட மீறிய ஞானிகள் இல்லை என்னும் அவர்களுடைய மனதில் பலமாக சுவரை கட்டிக்கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பரமாத்மா ஞானம் சொல்லினாலும் அவருடைய கொள்கை தாண்டி கேட்கும் நிலையில் இல்லை.

மோக்ஷாதிபதியான பரமாத்மாவை தெரிவிப்பதற்காக பூர்வம் இந்து மதத்திலேயே ஒரே கடவுளைப் பற்றி தெரிவிக்கும் ஞானம் வெளிப்பட்டது. இந்து மதத்திலேயே ஒரே கடவுளையே வழிப்படும் தேவாலயங்கள் கூட தயாரானது.

ஆனால் தற்போது காலத்தில் இந்து மதம் ஹிந்து மதமாக மாறிப் போய் ஒரே கடவுளை வழிபடும் ஸ்தானத்தில்

பலவிதமான தேவதைகள் ஆராதனை ஏற்பட்டது. காலத்தின் முடிவில் குறிப்பாக எந்த மதம் அல்லாத இந்து மதத்தில் இருந்து பல மதங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவற்றில் பலவிதமான ஆராதனைகள் இல்லாமல் போவது சந்தோசமாக இருந்தாலும், மதத்தின் விழிப்புணர்வு இல்லாமல் போய் வேறு மதம் வெறுப்பு என்று சிலருக்குள் வெறுப்பு நின்று போனது. அதனைப் பொறுத்து எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் அவரில் இன்னும் சிறிது மாயா வேலை செய்கின்றது என்று சொல்லலாம். இதன் போன்று தற்போது காலத்தில் எந்த மாயாவும் வேலை செய்யாத விதானம், எல்லா மதங்களில் விழிப்புணர்வு, எல்லோருக்கும் மற்ற தேவதைகளுக்கும் அதிபதியான பரமாத்மாவை தெரிகின்ற ஞானம் இருகின்ற போதனைகள், அனுசரிக்கின்ற விதானம் எவ்வளவோ தேவை. அந்த தேவை பூர்த்தி செய்ய **த்ரைத்த சித்தாந்த போதனைகள் கடவுள் நமக்கு கொடுத்தார்.** கடவுள் கொடுத்த உண்மையான ஞானம் பிரபோதா சேவா நிறுவனத்தில் இருப்பதினால் நம்முடைய அதிர்ஷ்டமாக நினைத்து இந்த அமைப்பு நபர்கள் வேறு அவர்களுக்கு கண் திறக்கும் படி சில முறைகள் தெரிந்து கொண்டு இருக்க வேண்டும்.

த்ரைத்தாராதனையை த்ரைத்த சித்தாந்தத்தை தெரிந்த ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டும். பிரபோதா சேவா சமிதி அவர்கள் த்ரைத்தாராதனை செய்து தெரியாதவர்களுக்கும் கூட தெரியப்படுத்தும் தகுதி கொண்டிருக்க வேண்டும். இந்த சங்கத்திற்கு சேர்ந்தவர்கள் பரமாத்மா ஞானம், பரமாத்மா ஆராதனையில் தவிர வேறு தேவதைகள் ஆராதனைகளில் கலந்து கொள்ளக்கூடாது. நெருங்கியவர்கள் அழைத்தாலும் வேறு தேவதைகள் ஆராதனையில் கலந்து கொள்ள கூடாது. நெருங்கி இருக்கின்ற சொந்தக்காரர்கள் அழைத்தாலும், அவர்களுக்கு அர்த்தம் ஆகும்படி நம்முடைய விதானத்தை தெரிவித்து எங்களுடைய முறை பிரகாரம் அப்படி கலந்து கொள்ளுவது தெய்வ துரோகம் என்று சொல்ல வேண்டும்.

பரமாத்மாவுக்காக எந்த கஷ்டமும் படலாம் வேறு தேவதைகளுக்காக சிறிதளவு கூட கஷ்டப்படக்கூடாது. எல்லா தேவதைகளுக்கு செய்கின்ற பூஜைகளில் கலந்து கொள்ளாமல் போகுவது மட்டுமல்லாமல் அப்படிப்பட்ட பூஜை நடத்துவதற்கு, கட்டுமானமானத்திற்கு நன்கொடைகள் வழங்கக் கூடாது. அப்படி கொடுத்தால் அஞ்ஞானம் முறையாக வேறு தேவதைகள் ஆராதனைகளை ஊக்கப்படுத்துவதாகும். ஆதி, மத்திய, எல்லையற்ற பரலோக அதிபதியான பரமாத்மா, அவருடைய அம்சத்தை ஆராதனை செய்யும் ஆராதனையில் கலந்து கொள்ளலாம். அங்கு கொடுக்கின்ற பிரசாதத்தை மகா பரிசாக நினைக்க வேண்டும். மற்ற தேவதைகள் ஆராதனைகள் பிரசாதம் யாராவது கொடுத்தால் அவற்றை தின்பண்டமாக நினைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தன் சுயமாக புதிய த்ரைத்த ஞானம் தெரிந்து கொள்ளுவது, முடிந்தால் ஒவ்வொரு நாளும் சிலருக்காவது த்ரைத்த ஞானம் தெரிவிக்க வேண்டும். த்ரைத்தாராதனை செய்கின்ற மூன்று நாட்களில் புனிதமாக இருப்பதற்கு பழக்கப்படுத்திக்க வேண்டும். அந்த மூன்று நாட்களில் கடினமாக பேசுவது, தூசிப்பது விட்டுவிட வேண்டும். த்ரைத்தாராதனையில் எல்லோரும் வெள்ளை ஆடைகளை அணிந்திருக்க வேண்டும். வெள்ளை ஞான சின்னமான சந்திரன் வண்ணம். எல்லோரும் வெள்ளை ஆடைகள் அணிவது ஒரு முறையை தெரிவிக்கும். த்ரைத்த சங்கத்தில் யார் இறந்து போனாலும் பூர்வம் இருந்த ஆச்சாரம் போல் அந்த சவத்தை சிவமாக எண்ணிக்கொண்டு எல்லோரும் தேகம் இறுதி சடங்கில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும். த்ரைத்த ஞானம் பிரகாரம் **“ஸ்ரீமதம் (ஸ்ரீமந்தம்)”** ஞானம் தெரிந்த ஸ்ரீகளுக்கு (பெண்களுக்கு) மட்டும் செய்ய வேண்டும். இறந்து போனவன் ஜென்மத்திற்கு போனால் அவனுக்கு பிண்டா கூடு (பிண்டம்) வைக்கக்கூடாது. இறந்து போனவன் மோக்ஷம் அடைந்தான் என்றால் அவனுக்கு தவறாமல் பிண்டா கூடு வைக்கின்ற காரியம் முறையாக செய்ய வேண்டும். இறந்த உடலுக்கு சிவ பூஜை செய்யும்போது, அதன் போலவே மோக்ஷம் அடைந்தவனுக்கு பிண்டா கூடு வைக்கின்ற சமயத்தில் த்ரைத்தம் என்றால்

மூன்று ஆத்மாக்களை தெரிவிக்கும் வெள்ளை துணியை தலைமேல் கட்டி கொள்ள வேண்டும். ஒருவேளை பிண்டா கூடு காரியம் மிக அரிதாக நடக்கும் அதனால் இந்த வேலை இல்லாமல் போகலாம் சிவத்தை மட்டும் தலை மீது துணியை கட்டிக்கொண்டு தொட வேண்டும். பிண்டா கூடு பற்றி, சவத்தை சிவமாக பார்ப்பது, ஸ்ரீமந்தம் பற்றி வேறு அவர்களுக்கு சொல்வது மற்றும் த்ரைத்தாராதனை பற்றி சொல்வது சாத்தியம் இருக்கும் வரை செய்ய வேண்டும். பிரபோதா சேவாசமிதி அவர்கள் எப்போதும் ஞானம் தெரிந்து கொள்வதற்கு மற்றும் தெரிவிப்பதற்கு சிறிது காலம் ஒதுக்கப்பட்டு, கடவுளுக்காக ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் வேலை செய்யும்படி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அப்படி வந்த பணத்தை கடவுளுடைய வேலைக்கு உபயோகப்படுத்த வேண்டும். பிரபோதா சேவா அமைப்பில் உண்மையான ஞானம் இருக்கிறது என்று வேறவர்களுக்கு தெரியும்படி நடந்து கொள்ள வேண்டும்.

பூமி மீது தர்மங்கள் அதர்மமாக மாறும் என்னும் பகவத்கீதாவில் கடவுள் தெரிவித்தது போல பூர்வமும் எவ்வளவோ புனிதமாக இருந்த ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகள் தற்போது காலத்தில் அபவித்திரமாக மாறிப்போனது. அதன் போலவே எந்த புனிதம் இல்லாத மற்ற நாட்கள் புனிதமாக கணக்கிடப்படுகின்றது. விவரமாக பார்த்தால் எல்லாவிதமாக கெட்டுப் போனவனை இவன் சனி பிடித்தவன் என்று சொல்கின்றோம். எல்லாவிதமாக கெடுப்பதற்கு சனி அதிபதி என்று எல்லோருக்கும் தெரிந்தது போலவே இருக்கிறது. சனி உடைய நாள் சனிக்கிழமை பூர்வம் புனிதம் இல்லாத நாளாகவே கணக்கிடுவார்கள். அதன் போலவே பொருள், வாகனம், ஆடம்பரத்திற்கு, சிங்காரத்திற்கு அதிபதியான சுக்கிரனை உடைய வெள்ளிக்கிழமை, உலக தேவதைகளுக்கு குருவாக இருந்து உலக ஞானத்திற்கு அதிபதியாக இருந்து உலக ஞானம் மீது மனிதர்களை லக்னம் செய்யும் குரு கிரகம் நாள் வியாழக்கிழமை, மந்திர தந்திரங்களுக்கு, பூத பிரேத்த

பிசாசுகளுக்கு தாந்திரீக வித்தைகளுக்கு அதிபதியான புதனுடைய நாளான புதன்கிழமையை பரமாத்மா ஞானம் தெரிந்தவர்கள் சிறிதளவு கூட புனிதமான நாளாக எண்ணுபவர் அல்ல. ஞானம் பிரகாரம் மூன்று நாட்களான ஞாயிறு திங்கள் செவ்வாய் கிழமைகளை புனிதமாக பார்ப்பார்கள். தற்போது காலத்தில் இறுதி மூன்று நாட்களான வியாழன் வெள்ளி சனி கிழமைகள் புனிதமாக மாறிப்போவது, முதல் மூன்று நாளான ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகள் அபவித்திரமாக மாறிப்போவது நடந்தது.

எல்லா விதமாக கெட்டுப்போனவனுக்கு மற்றொரு பெயராக சொல்லுகின்ற சனிக்கிழமையை, எல்லா தரித்திரங்களுக்கு அடையாளமாக சொல்கின்ற சனிக்கிழமையை சிறிது கூட ஞானம் இல்லாதவர்களும் கூட புனிதமாக பார்க்கின்றார்கள். பலர் சனிக்கிழமை வீடுகள் சுத்தம் செய்து கொண்டு, சிலர் தேவதைகளுக்கு முக்கியமாக பூஜை செய்கின்றார்கள். சனிக்கிழமை சுத்தமாக தொடர்ந்து தலை ஸ்நானம் செய்து மாமிசத்தையும், மீன்களையும் வீட்டுக்குள்ளே கூட கொண்டு வராமல் புனித நாளாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஞானம் சம்பந்தமாக எப்படிப்பட்ட முக்கியமான நாள் அல்லாத நாட்களை மற்றும் தரித்திரத்திற்கு நாளான சனிக்கிழமையை இந்த காலத்தில் புனிதமாக பார்ப்பது, எல்லா விதமாக ஞானம் விவரத்தில் இருக்கின்ற ஞாயிற்றுக்கிழமையை அபவித்தரமான வேலைகளுக்கு உபயோகிப்பது பார்த்தால் தர்மம் அதர்மமாக மாறுகின்றது என்று சொல்லாமல் இருக்க முடியாது. அதன் போலவே சிறிதளவு கூட ஞானசம்பந்தம் விஷயம் இல்லாத, உலக சம்பந்தமான தனம், தங்கம், பொருள், வாகனம், இன்பம் பாக்கியம், சிங்கார விஷயத்திற்கு புனிதமான சுக்கிரகிரகம் தினமான வெள்ளிக்கிழமை கூட லட்சுமி கிழமை, பணம் கிழமை என்னும், பணத்திற்காக பூஜைகளை நடத்தி, உபவாசங்கள் இருந்து புனிதமாக கடத்துவது பார்த்துக் கொண்டே இருக்கிறோம். வியாழக்கிழமை கூட சாய்பாபா பக்தர்கள், ராகவேந்திரசுவாமி

பக்தர்கள் சுத்தமாக புனிதமாக பூஜைகளை நடத்துவதும் கூட பார்க்கிறோம். இந்த விதமாக நாளுக்கு இறுதியான குரு, சுக்கிரன், சனி மூன்று நாட்களை புனிதமாக பார்ப்பது, முதல் ஞாயிறு, திங்கள், செவ்வாய் மூன்று நாட்களை அபவித்திரமான காரியங்களுக்காக உபயோகித்து அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் போவது மிக கவனிக்க வேண்டிய விஷயம். இதனை பொறுத்து கால கர்ப்பத்தில் எத்தனையோ தர்மங்கள் அதர்மங்களாக, அதர்மங்கள் தர்மங்களாக மாறியது என்று அர்த்தமாகிறது. பரமாத்மா ஞானத்திற்கு தடையாக இருக்கின்ற அதர்மங்கள் இல்லாமல் செய்து கொண்டு, கடவுளுடைய தர்மங்கள் பிரச்சாரம் செய்து அவற்றை அனுசரிப்பது நம்முடைய கடமை. அதர்மங்களை இல்லாமல் செய்து தர்மங்களை நிறுத்துவதற்கு சிருஷ்டி கர்த்தாவான கடவுளே மனிதனாக வந்து எத்தனையோ சிரமங்கள், கஷ்டங்கள், அவமானங்களை பட்டார். மனிதர்களாகிய நாம் இப்போது தர்மங்களை தர்மமாக, அதர்மங்களை அதர்மமாக காண்பித்து சொல்லினால் அதர்மங்களுக்கு பழக்கமாகிய மனிதர்கள் மூலம் சிறிது இடைஞ்சல்கள் தவறாது. விஷயத்தில் இருக்கின்ற சத்தியத்தை தெரிந்தது சொல்லாமல் போனால் தன்னுடைய உள்ளே தெய்வ பிரதிநிதியான ஆத்மாவுக்கு துரோகம் செய்தது போல ஆகும். தெரிந்ததை சொல்லினால் இந்த பக்கம் அஞ்ஞான மக்களுக்கு இஷ்டம் இல்லாமல் ஏற்படும். சொல்லாமல் போனால் அந்த பக்கம் ஆத்ம துரோகம் ஆகும். ஞாயிற்றுக்கிழமை வீடு, உடம்பு சுத்தமாக வைத்துக் கொண்டு மாமிசத்தை எடுத்து கொள்ளாமல் புனிதமாக இருக்க வேண்டும் என்னும் சொல்லினாலும், சனிக்கிழமை மாமிசத்தை திங்கவேண்டும் என்று சொல்லினாலும் ஞானம் தெரியாதவர்களுக்கு மிக எதிர்ப்பாக இருக்கும். தெய்வ மார்க்கத்தில் எப்படிப்பட்ட கஷ்டமாக இருந்தாலும் எதிர் கொள்ள வேண்டும் என்னும், அதனினால் தெய்வத்திற்கு நெருங்குவோம் என்னும் நினைத்து ஒவ்வொரு மனிதனும் தர்மங்களை பிரச்சாரம் செய்து அதர்மங்கள் இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்வோம்.

பூர்வம் இந்து மதம் எவ்வளவோ ஞானம் கொண்டு இருந்தது. ஞானம் நிறைந்த நாடானதினால் பாரத நாட்டை இந்து நாடு என்று கூட அழைப்பார்கள். பூர்வம் மூன்று நாட்கள் த்ரைத்தாராதனை சரியாக நடந்தது. அந்த நாள் குழுவாக செய்த த்ரைத்தாராதனை இன்று இஸ்லாம் மதத்தில் மஜீத்தில் (மசூதி) நடக்கும் பிரார்த்தனை போல் இருந்தது. ஒவ்வொருவரும் பிரார்த்தனையில் கலந்து கொள்வார்கள். அப்படிப்பட்ட இந்துக்கள் ஆராதனை இன்று வார்த்தைக்காவது இல்லாமல் போனது. பூர்வம் எவ்வளவோ அர்த்தமாக செய்யும் ஞான ஆராதனை இல்லாமல் போனது. அதன் போல பிரார்த்தனைகள் இஸ்லாம் ஸ்தாபனத்தில் முஸ்லிம்களில் இருக்கிறது. எவ்வளவோ விசுவாசம், கடவுளிடம் பணிவு, பிரவக்தா வார்த்தை மீறாமல், ஒழுக்கம் இஸ்லாம் மதத்தில் இருப்பது சந்தோஷப்பட வேண்டிய விஷயம் பூர்வ காலம் எவ்வளவோ ஞானம் இருக்கின்ற இந்து மதத்தில் இன்று அஞ்ஞானம் இடம் பிடித்துக் கொண்டு பலவிதமான தேவதைகள் ஆராதனைகளுக்கு பழக்கப்பட்டு அவர்களுடைய த்ரைத்தாராதனை மறந்து போவது கவலைக்குறிய விஷயம். இப்போதாவது அவர்களுடைய தவறுகளை உணர்ந்து பின் பிறந்த இஸ்லாம் மதத்தில் இருக்கின்ற ஆராதனை (நமாஸ்வை) பார்த்து, மிக முன்பே பிறந்த நமக்கு எவ்வளவோ ஞானம் விவரம் கொண்ட ஆராதனை இருக்கிறது என்று கிரகித்து, த்ரைத்தாராதனை விவரம் நாம் தெரிந்து கொண்டு வேறவர்களுக்கு தெரிவித்து, அனுசரித்து வேறவர்களை அனுசரிக்கும்படி செய்ய வேண்டும். இந்துக்களான ஒவ்வொருவரும் இதுவரை தெரியாத த்ரைத்தாராதனை தெரிந்து கொள்ள வேண்டும். இதுவரை வேறு குருக்கள், இந்து மதத்தில் இருக்கின்ற ஞானத்தை போதிக்கின்ற சுவாமிகள் யாரும் இந்த விஷயம் சொல்லவில்லையே! என்று எங்களை கேள்வி கேட்காமல், எத்தனை சுவாமிகள் இருந்தாலும், ஞானம் தெரியாமல் போனால் பிரயோஜனம் இல்லை என்னும் நினைத்து வேறு மதம் முன்பு தைரியமாக நிற்கவைக்கின்ற த்ரைத்தாராதனை செய்யுங்கள். ஆண்மை இல்லாத புருஷன் மனைவியை எவ்வளவு நன்றாக பார்த்துக் கொண்டாலும், பெண்ணான

ஸ்ரீவுக்கு அதிருப்தி இருக்கும். அதன் போலவே புருஷத்துவம் (தெய்வத்தை) தெரிவிக்காத குரு எவ்வளவு நன்றாக போதித்தாலும் பெண்தனம் (மாய தத்துவம்) கொண்டவனுக்கு அதிருப்தி இருக்கும். அதனால் தான் இன்று காலத்தில் ஒரு நபர் எத்தனையோ குருக்களை அனுசரிக்க வேண்டியது இருக்கும். அப்போதும் கூட அவனுக்கு தெரிய வேண்டியது தெரியவில்லை. இப்போதாவதும் மீறிப் போனது ஒன்றுமில்லை. குருக்கள் பிரமையை விட்டு எல்லோருக்கும் **"ஜெகத் குரு"** என்பவர் ஒருவர் இருக்கிறார் என்று நினைத்து, அவரை தேடும் நோக்கத்தில் இந்த த்ரைத்தாராதனை அனுசரித்து இந்துக்கள் ஆராதனை இப்படி இருக்கிறது என்று தெரியும்படி செய்ய வேண்டும். **நீ உண்மையான இந்துவாக இருந்தால் உன் முகத்தில் பொட்டு, நாமத்தை விட முக்கியம் ஞாயிறு, திங்கள், செவ்வாய் நாட்கள் ஆராதனை, மூன்று நாட்கள், மூன்று திசையில், மூன்று யோகத்தில், மூன்று லோகத்தில் இருக்கின்றவர்களுக்கு தெரியும் படி மூன்று ஆராதனைகளை செய்து "இந்து" என்னும் சொல்லுக்கு மதிப்பு, அர்த்தத்தை சேர்க்க விரும்புகிறேன். இப்போதாவது ஒவ்வொரு நாளும் இந்துவாகப் பிறந்து, இந்துவாக வாழ்ந்து இந்துவாக மரணிப்போம் என்று தெரிவிக்கிறோம்.**

*****

**அசத்தியம் ஆயிரம் பேர் சொல்லினாலும்**

**அது சத்தியம் ஆகாது,**

**சத்தியம் ஆயிரம் பேர் அல்ல வென்று சொல்லினாலும்**

**அது அசத்தியம் ஆகாது.**

# ஹிந்து ரக்ஷனா! ஹிந்து பக்ஷனா!!

## பகவத்கீதாவை படிக்காதவன் ஹிந்து ரக்ஷஹனா?

### ஹிந்து தர்மமே தெரியாதவன் ஹிந்து ரக்ஷஹனா?

ஹிந்துக்கள் இன்று குலங்களாக பிரிக்கப்பட்டு, அதில் ஏற்றத்தாழ்வுள்ள குலங்களாக விவரிக்கபடுகின்றன என்று எல்லோருக்கும் தெரிந்த சத்தியம் தான். கடவுள் மனிதர்களை எல்லோரையும் சமமாக பிறக்க வைத்தால் சிலர் மனிதர்கள் அவர்களுடைய சுயநல புத்தியால் ஹிந்து (இந்து) சமூகத்தை துண்டு துண்டாக செய்து, பலவீனப்படுத்தி ஹிந்து சமூகம் அனைத்திற்கும் அவர்களே பெரியவர்கள் என்னும், அவர்கள் சொல்லியது போல் எல்லோரும் கேட்டு, எல்லா காரியங்கள் செய்து கொள்ள வேண்டும் என்று பிரச்சாரம் செய்து கொண்டார்கள். எத்தனையோ குலங்களாக இருக்கின்ற ஹிந்து சமூகத்தில் அவர்கள் குலமே உயர்வானது என்னும் சொல்லுவது மட்டுமல்லாமல், வேறு குலங்களில் இருப்பவர்களுக்கு அவர்களே மார்க்கத்தை காண்பிப்பவர் போன்று, குருக்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள். எதிர்காலத்தில் அவர்களுக்கு யாரும் தடங்கல் செய்யக்கூடாது என்னும், எல்லா குலங்களையும் தீண்டத்தகாதவர்களாக செய்து, ஹிந்து சமூகத்திற்கு தீராத அநியாயம் செய்தார்கள். அதுவரை நிறுத்தப்படாமல் இன்றும் கூட ஹிந்து சமூக ரட்சகர்களாக சொல்லிக்கொண்டு, ஹிந்து சமூகத்தை சர்வ நாசனம் செய்து, ஹிந்து சமூகம் வேறு மதமாக மாறிப்

போவதற்கு முதல் காரணமானவர்கள் ஆனார்கள். அப்படிப்பட்டவர்கள் ஹிந்து சமூகத்திற்கு புழுவுகள் போன்று, மற்ற குலங்களில் இருப்பவர்கள் எல்லோரும் அவர்களுடைய உண்மையான சொரூபம் தெரியாமல் அவர்கள் சொல்லியது போல் கேட்பதால், ஹிந்து சமூகத்தை முழுமையாக அஞ்ஞான திசை பக்கம், அதர்மம் மார்க்கத்திற்கு அனுப்பி, மக்களுக்கு சிறிதளவு கூட தெய்வ ஞானம் தெரியாமல் செய்து, அவர்கள் சொல்லியதே தெய்வ போதனை என்று நம்ப வைத்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் இன்று த்ரைத்த சித்தாந்த கர்த்தாவான ஆச்சாரிய பிரபோதானந்த யோகீஸ்வரர் அஞ்ஞானம் பக்கம் நின்று போன ஹிந்து சமூகத்தை சரியான வழியில் இருப்பதற்கு, **பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்த்தி யோகம் என்னும் அத்தியாயத்தில் போதிக்கப்பட்ட ஷர, அக்ஷர, புருஷோத்தமர் என்னும் மூன்று புருஷர்கள் விஷயங்கள் த்ரைத்த சித்தாந்தம் என்ற பெயரில் முன்மொழியபட்டு தெய்வ ஞானம் எல்லோருக்கும் அர்த்தமாகும் படி கிரந்தம் வடிவத்தில் எழுதுவதும், போதிப்பதும் நடக்கின்றது.** அதனினால் இன்று மக்கள் உண்மையான ஞானம் தெரிகிறது என்று சந்தோசப்படுகிறார்கள். உயர் குலங்களாக இருப்பவர்கள் கூட எத்தனையோ பேர் அவர்களில் இருக்கின்ற அஞ்ஞானம் இருளை விட்டு, இதுவரை அவர்களுக்கு தெரியாத ஞானம் யோகீஸ்வரர்களினால் இப்போது தெரிகின்றது என்று சந்தோஷப்பட்டு சிஷ்யர்களாக சேர்ந்து போகின்றார்கள். ஆனால் உயர் குலத்தில் சிலர்கள் மட்டும் யோகீஸ்வரர் தெரிவிக்கும் ஞான விஷயங்களை பார்த்து இந்த ஞானத்தின் மூலம் மக்கள் ஞானம் தெரிந்து கொண்டால், ஞானம் தெரியாத அவர்களை கௌரவிக்க மாட்டார் என்னும் நினைத்து, அதனினால் சமூகம் மீது அவர்களுடைய ஆதி பத்தியம் இல்லாமல் போகும் என்று நினைத்து, யோகீஸ்வரர் தெரிவிக்கின்ற த்ரைத்த சித்தாந்தமும், த்ரைத்த சித்தாந்த பகவத்கீதாவும் ஹிந்துக்கள் ஞானம் அல்லவென்று, அது கிறிஸ்தவ மதத்திற்கு சம்பந்தப்பட்டது என்னும், அதை யாரும் படிக்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அது மட்டுமல்லாமல் நாங்கள் ஹிந்து தர்ம ரட்சகர்கள் என்னும், சிறிது அரசியல் வண்ணம் பூசிக்கொண்டு, எங்களுடைய ஞான பிரச்சாரத்திற்கு ஆங்காங்கே தடங்கல் செய்கின்றார்கள். அவர்கள் வார்த்தையை கேட்கும் வேறு குலங்களில் இருக்கின்றவர்களுக்கும் கூட பிபோதானந்த யோகீஸ்வரர் சொல்லும் ஞானம் ஹிந்து ஞானம் அல்ல,

கிறிஸ்தவர்கள் ஞானம் என்னும் இந்துக்கள் போர்வையில் கிறிஸ்தவர்கள் மத பிரச்சாரம் செய்கின்றார்கள் என்னும் சொல்லுவது மட்டுமல்லாமல், அப்படிப்பட்டவர்களை ஊக்கப்படுத்தி எங்களுடைய பிரச்சாரத்திற்கு தடங்கல் செய்யும்படி செய்கின்றார்கள். யோகீஸ்வரர் நிறுவப்பட்ட **ஹிந்து (இந்து) ஞான மேடை** இப்படி நிறுத்தப்பட்டதை சிறிது காலமாக பொறுமையாக பார்ப்பது நடந்தது. எங்களில் உள்ள பொறுமையை இழந்து, எங்களை எல்லா மதங்கள் பிரச்சாரம் செய்கின்றவர்களாக வர்ணித்து சொல்லும் உயர் குலத்தை சேர்ந்தவர்களையும், அவர்களையே பின் தொடர்பவர்களையும் நாங்கள் எதிர்த்து கேள்வி கேட்பதும் நடந்தது. நாங்கள் கேட்ட கேள்விக்கு ஒரு கேள்விக்கு கூட அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. அந்த பதில் எப்படி இருக்கின்றதோ வாசகர்களாக பாருங்கள்.

**எங்களுடைய கேள்வி:-இதுவரை எந்த இந்துவும் செய்யாத விதம் ஊர் ஊரும் திரிந்து, ஊரில் வீடு வீட்டுக்கும் திரிந்து இந்து தர்மங்களை பிரச்சாரம் செய்கின்றோம் அல்லவா! அப்படிப்பட்ட எங்களை நீங்கள் எல்லா மதம் பிரச்சாரம் செய்கின்றீர்கள் என்று எதற்கு சொல்கின்றீர்கள்.**

**அவர்களுடைய பதில்:-**ஹிந்து மதத்தில் எத்தனையோ சுவாமிஜீகள் இருக்கின்றார்கள். அவர்கள் யாரும் வீடு வீடாக திரிந்து பிரச்சாரம் செய்யவில்லை. ஹிந்துக்கள் அதன் போன்ற பிரச்சாரங்கள் செய்ய மாட்டார்கள். கிறிஸ்தவர்களாக இருந்தால் தான் ஊர் ஊராக, வீடு வீட்டுக்கு திரிந்து பிரச்சாரம் செய்வார்கள். நீங்கள் ஹிந்துக்கள் போர்வையில் வீடு வீட்டுக்கு திரிந்து கிறிஸ்தவர்கள் பிரச்சாரம் செய்கின்றீர்கள்.

**எங்களுடைய கேள்வி:- நாங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால் பகவத்கீதா எதுக்கு பிரச்சாரம் செய்கின்றோம்?**

**அவர்களுடைய பதில்:-** நீங்கள் பிரச்சாரம் செய்வது த்ரைத்த சித்தாந்த பகவத்கீதா. அது கிறிஸ்தவர்கள் உடையது. பைபிளுக்கே நீங்கள் அதன் போன்ற பெயர் வைத்தீர்கள்.

**எங்களுடைய கேள்வி:- கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே அவர்களை சொல்லிக் கொள்வார்கள். அதன் போலவே பைபிள்ளை பைபிள் ஆகவே சொல்லிக் கொள்வார்கள். அவர்களுடைய பிரச்சாரம் கிறிஸ்தவம், பைபிள் ஆகும்போது அதே பெயர் மீது பிரச்சாரம் செய்வார்கள் தவிர இந்துவாக பகவத்கீதா பெயரில்**

**எதற்கு பிரச்சாரம் செய்வார்கள். இதுவரை அதன் போன்று எங்கும் நடக்கவில்லை. எந்த மதத்தில் இருக்கின்றவர்களும் அந்த மதத்தின் பெயர் சொல்லிக் கொள்ளுவார்கள் மேலும் வேறு மதத்தின் பெயர் சொல்ல மாட்டார்கள். அவ்வளவு ஏன் நீங்கள் எங்களுடைய பகவத்கீதா திறந்து பார்த்தீர்களா? அதில் பகவத்கீதா சுலோகங்கள் இருக்கிறதா? பைபிள் வாக்கியங்கள் இருக்கிறதா?**

**அவர்களுடைய பதில்:-**த்ரைத்த சித்தாந்தம் என்று இருக்கிறது அல்லவா! த்ரைத்தம் என்றால் த்ரித்துவம், த்ரினிடி என்று எங்களுக்கு நன்றாக தெரியும்.

**எங்களுடைய கேள்வி:-ஹிந்து தர்மங்களில் அத்வைத சித்தாந்தத்தை ஆதிசங்கராச்சாரியார் முன்மொழிந்தார். விஷிஷ்ட்ட துவைத்தத்தை ராமானுஜாச்சாரியார் முன்மொழிந்தார். துவைத்தத்தை மத்வாச்சாரியார் முன்மொழிந்தார். இப்போது ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர் த்ரைத்த சித்தாந்தத்தை முன்மொழிய செய்தார். சித்தாந்த கர்த்தர்கள், சித்தாந்தங்கள் வேறாக இருந்தாலும் எல்லோரும் ஹிந்துக்கள்தான் என்று நீங்கள் எதற்கு நினைத்துக் கொள்ளவில்லை?**

**அவர்களுடைய பதில்:-**உங்களுடைய த்ரைத்த சித்தாந்த பகவத்கீதாவில் எக்னங்கள் செய்யக்கூடாது என்று எழுதினீர்கள் அல்லவா! உண்மையாக பகவத்கீதாவில் அதன் போன்று இல்லை அல்லவா!

**எங்களுடைய கேள்வி:-நீங்கள் ஹிந்துக்களில் முக்கியமானவராக இருந்து அவ்வளவு முட்டாள்தனமாக பேசினால் எப்படி? உலகம் அனைத்திற்கும் ஒரே ஒரு பகவத்கீதா இருக்கும், உங்களுடைய, பகவத்கீதா எங்களுடைய பகவத்கீதா, வேறாக இருக்காது. பகவத்கீதாவின் விவரம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அவர்களுக்கு அர்த்தமாகும் படி சொல்லலாம் மேலும், எல்லோருக்கும் மூல கிரந்தமான பகவத்கீதா ஒன்றுதான் என்று நினைவு வைத்துக் கொள்ளுங்கள். த்ரைத்த சித்தாந்த பகவத்கீதா எல்லாவற்றை விட சரியான எண்ணத்துடன் இருக்கிறது என்றும் படித்த ஞானங்கள் எல்லோரும் புகழ்ந்து கொண்டிருந்தால், உங்களுடைய குலத்திலே எத்தனையோ பேர் புகழ்ந்து கொண்டுயிருக்கும் போது, உங்களில் சிலருக்கு மட்டும் எதிர்பாக**

**தெரிகிறது என்றால் பொறாமையால் தான் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. எக்னங்கள் செய்ய வேண்டாம் என்று நாங்கள் எங்கும் சொல்லவில்லை. எக்னங்களினால் புண்ணியம் வரும், சொர்க்கம் வரும் என்று சொல்லினோம். எக்னங்களினால் மோக்ஷம் வராது, கடவுள் தெரியபட மாட்டார் என்று சொல்லினோம். அவ்வளவு ஏன் நீங்கள் நாங்கள் எல்லா குலங்களை விட தூய்மையான ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! பகவத்கீதாவில் சொல்லிய ஒரு ஹிந்து தர்மத்தை பற்றி சொல்லுங்கள்.**

**அவர்களுடைய பதில்:-**அந்த வார்த்தைகள் வேண்டாம்... நீங்கள் ஹிந்துக்கள் அல்ல.

**எங்களுடைய கேள்வி:-பிடிவாதமாக பேசாதீர்கள் நீங்கள் உயர் குலத்தை சேர்ந்தவர்கள் என்று இஷ்டம் வந்தபடி பேசாதீர்கள். நாங்கள் ஹிந்துக்கள் அல்ல என்பதற்கு ஆதாரம் ஏதாவது காட்டுகிறீர்களா? எங்களுடைய கதை பக்கத்தில் வைத்து நீங்கள் சரியான ஹிந்துக்களானால் பகவத்கீதாவில் விஸ்வரூப சந்தர்சன யோகம் என்னும் அத்தியாயத்தில் 48ஆவது சுலோகத்தில் 53ஆவது சுலோகத்தில் பகவான் என்ன சொல்லினாரோ நீங்களே சொல்லுங்கள்.**

**அவர்களுடைய பதில்:-**நாங்கள் இதுவரை பகவத்கீதா படிக்கவில்லை. உங்களுக்கு வேண்டுமென்றால் சம்பூர்ணா நந்தா சுவாமியினால் சொல்ல வைப்போம்.

**எங்களுடைய கேள்வி:-குறைந்தபட்சம் பகவத்கீதாவும் கூட படிக்காத நீங்கள் யோகீஸ்வரர்களான பிரபோதானந்த சுவாமியை திட்டுவது நல்லதா? ஒரு இந்து தர்மத்தை கூட தெரியாத நீங்கள் ஹிந்து தர்ம ரக்ஷகர்கள் என்று சொல்லுவது நல்லதா? யோகீஸ்வரர் எழுதிய ஒரு கிரந்தம் கூட படிக்காமல் நான் தவிர பூஜ்ஜியர்களாக, குருக்களாக யாரும் இருக்கக் கூடாது என்று பொறாமையுடன் இப்படிப் பேசினால் கடவுள் பொறுத்துக் கொள்ள மாட்டார் என்று சொல்கின்றோம்.**

**அவர்களுடைய பதில்:-**ஹிந்து மதத்தில் எத்தனையோ பேர் கடவுள்கள் இருக்கிறார்கள். சிவனும் கடவுளே, சிவனுடைய மகன் விநாயகனும் கடவுளே, ராமனும் கடவுளே, ராமனுடைய சேவகன் ஆஞ்சநேயனும் கடவுளே. அப்படிப்பட்ட ஹிந்து மதத்தில் கடவுள் ஒருவர்தான் என்று சொல்லுவது உங்களுடையது தவறு அல்லவா?

**எங்களுடைய வார்த்தை:-நாங்கள் மதத்தைப்பற்றி சொல்லவில்லை. ஹிந்து மதத்தில் எத்தனையோ கடவுள்கள் இருப்பது உண்மைதான், ஆனால் ஹிந்து ஞானத்தில், ஹிந்து தர்மம் பிரகாரம் விஸ்வம் அனைத்துக்கும் ஒருவரே கடவுள் என்று சொல்லினோம். பகவத்கீதாவில் கடவுள் சொல்லியதை சொல்லினோம் தவிர நாங்கள் தேவதைகளைப்பற்றி இல்லை என்று சொல்லவில்லையே! தேவதைகளுக்கு எல்லோருக்கும் அதிபதியான கடவுள் ஒருவர் இருக்கிறார், அவரே தேவதேவன் என்னும், அவரை ஆராதிக்க வேண்டும் என்று சொல்லினோம்.**

**அவர்களுடைய பதில்:-**நீங்கள் ராமனுடைய பெயர் சொல்லினீர்கள், சிவனுடைய பெயர் சொல்லினீர்கள், விநாயகர் பெயர் சொல்லினீர்கள். யாருடைய பெயரும் சொல்லாமல் கடவுள் என்னும், சிருஷ்டி கர்த்தா என்று பல தடவை சொல்லினீர்கள். கடவுள் என்ற வார்த்தை, சிருஷ்டி கர்த்தா என்ற சொல் கிறிஸ்தவர்களே உபயோகப்படுத்துவார்கள். ஹிந்துக்கள் உபயோகப்படுத்த மாட்டார்கள். அதனால் உங்களை ஹிந்துக்கள் அல்ல என்று கிறிஸ்தவர்கள் என்று சொல்கின்றோம்.

**எங்களுடைய கேள்வி:-கிறிஸ்தவ மதம் பிறந்து 2000 வருடம் ஆனது. சிருஷ்டி பிறந்து எத்தனை கோடி வருடங்கள் ஆனதோ யாரும் சொல்ல முடியாது. சிருஷ்டி ஆதியிலிருந்து "சிருஷ்டி கர்த்தா" என்ற வார்த்தை "கடவுள்" என்ற வார்த்தை ஹிந்து சமூகம் பயன்பாட்டில் உள்ளது. முதலில் இருந்து ஹிந்து சமூகத்தில் இருக்கின்ற கடவுள், சிருஷ்டி கர்த்தா என்ற பெயரை ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களுக்கு லீசுக்கு கொடுத்தார்களா? அல்லது அவர்களுக்கு முழுமையாக விற்பனை செய்து விட்டீர்களா? என்று கேட்கின்றோம். சிருஷ்டி கர்த்தா என்றும், கடவுள் என்றும் இந்துக்களாக இருக்கின்றவர்கள் சொல்லக்கூடாது என்பது எங்கேயாவது இருக்கிறதா என்று கேட்கின்றோம்?**

**அவர்களுடைய பதில்:-**நீங்கள் ஹிந்து மதத்தை அல்லாமல் வேறு மதங்களை போதிக்கின்றீர்கள் என்பதற்கு, நீங்கள் உங்களை ஹிந்துவாக சொல்லிக் கொள்ளவில்லை. ஹிந்துவாக அல்லாமல் இந்துவாக சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். அப்படிப்பட்டபோது நீங்கள் ஹிந்து மதத்தை பிரித்தது போல் ஆகும் அல்லவா! தனித்துவமாக இந்து மதம் என்பதை பிரச்சாரம் செய்தது போல்

ஆகும் அல்லவா! நீங்கள் ஹிந்துவாக இருந்தால் உங்களுடைய கிரந்தத்தில், உங்களுடைய போதனையில் தனித்துவமாக இந்துக்கள் என்று எதற்கு நீங்கள் சொல்கின்றீர்கள்.

**எங்களுடைய வார்த்தை:-**நாங்கள் நேராக ஒரு கேள்வியைக் கேட்கின்றோம் பதிலை சொல்லுங்கள். ஹிந்து, இந்து என்ற வார்த்தையில் சிறிய சத்தம் தவிர என்ன வித்தியாசம் இருக்கின்றதோ நீங்களே கூறுங்கள். தெலுங்கு பாஷையில் எழுதுகின்றவர் அனைவரும் ஹிரண்யகசப்பனை கொன்றது நரசிம்ஹ சாமி என்று சொல்வார்கள். அதன் போலவே எழுதுவார்கள். தற்போது காலத்தில் நரசிம்ஹோளு என்ற பெயர் இருக்கின்றவன் கூட அவனுடைய பெயரை நரசிம்ஹோளு என்று எழுதுவது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த வார்த்தை தவறு அதன் போன்று எழுதக்கூடாது அதனை **நரசிம்ஹ** என்று எழுத வேண்டும் என்று சொல்கின்றோம். காட்டில் இருக்கின்ற முருஹ ராஜா **சிங்ஹம்** என்று சொல்கின்றோம் தவிர **சிம்ஹம்** என்று சொல்ல மாட்டோம் என்று கூட சொல்கின்றோம். “சிங்ஹம்” என்றால் அர்த்தம் இருக்கிறது மேலும், “சிம்ஹம்” என்றால் அர்த்தமில்லை என்று கூட சொல்லினோம். அப்படி இருக்கிறது போல் சொல்லினால் “இந்து” என்ற வார்த்தைக்கு அர்த்தம் இருக்கிறது “ஹிந்து” என்ற வார்த்தைக்கு அர்த்தம் இல்லை என்று சொல்லினோம். சிருஷ்டி ஆதியில் பிறந்தது இந்து சமூகம் என்னும், அது நடுவில் பெயர் மாறி “துருஷ்டி, ஜிஸ்ஷ்டி” ஆனது போல “இந்து” என்ற சப்தம் “ஹிந்து” என்று சொல்லப்படுகிறது என்று சொல்லினோம். இந்து என்ற சொல் எதற்கு உபயோகப்படுத்த வேண்டும், ஹிந்து என்ற சொல் எதற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்று விவரமாக எங்களுடைய கிரந்தத்தில் இருக்கின்றது. இருந்த சத்தியம் உங்களுக்கு தெரிந்தாலும், நீங்கள் எங்களை விட பெரியதாக யாரும் இருக்கக் கூடாது என்று பொறாமையால் பேசுகின்றீர்கள்.

உயர் குலத்தில் எத்தனையோ பெரியோர்கள் எங்களுடைய ஞானத்தை தெரிந்து சந்தோஷப்பட்டிருந்தாலும், சிலர் மட்டும் வீதியில் இருக்கின்ற ரவுடிகள் போல உதைக்கிறோம், குத்துவோம், எரிப்போம் நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டாம் என்று சொல்லுவது நல்லது அல்ல. எங்களுடைய கிரந்தம் எதுவும் படிக்காமல் பேசுவது, நாங்கள் சொல்லிய வார்த்தையை கேட்காமல் இதெல்லாம் டிராமாக்கள், நாடகங்கள் சொல்லுவது

நல்லது அல்ல. நீங்கள் யாராவது எங்களுடைய கிரந்தத்தில் வேறு மதத்தை பிரச்சாரம் செய்தது போல, பலான மதத்தில் சேருங்கள் என்னும் சொல்லியது போல இருந்தால் நிரூபியுங்கள், அப்படி நிரூபித்தவர்களுக்கு **இந்து ஞான மேடை சார்பாக 10 லட்சம் ரூபாய் கொடுக்கின்றோம்.** நிரூபிக்காமல் போனால் நீங்கள் லட்ச ரூபாய் எந்த ஊரிலாவதும் கிருஷ்ணர் கோயிலுக்கு கொடுக்க வேண்டும். இந்த சபதத்திற்கு யாராவது முன்னுக்கு வருவீர்களா? என்று கேட்கின்றோம்.

**இப்படிக்கு**

**இந்து ஞான மேடை மற்றும்**

**பிரபோதா சேவாசமிதி**